# சோஷலிஸம்

ாபெ... ரி 2
1983
சோவியத் மாசிகை

பல்துறைப் பயிற்சி நி...யம்

# தத்துவமும் ந... முறையும்

முதலாளித்துவ மற்ற வளர்ச்சிப் பாதை பற்றி
மார்க்ஸிய-லெனினியம்

☆

80களில் அணிசேரா
இயக்கம்

★

"மூ...
அது...

சமாதானமும் சமாதான
சகஜீவனமும்

1983 (86) 2

# சோஷலிசம்

## தத்துவமும் நடைமுறையும்

பல்துறைப் பயிற்சி நிலையம்

சோவியத் சித்தாந்த அரசியல் பத்திரிகைகளின் மாதாந்த மஞ்சரி

நொவஸ்தி செய்தி ஸ்தாபனத் தயாரிப்பு

27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த, கொழும்பு 7 லுள்ள சோவியத் சோஷலிசக் குடியரசுகள் ஒன்றிய தூதரகத் தகவல் பிரிவின் தலைவர் வி. ஆர். குலாந்தா அவர்களால் கொழும்பு-10, 93, மாளிகாகந்த ரோட், மருதானையிலுள்ள பிரகதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| இன்றைய விவகாரங்கள் | யூரி அந்தரபோவ் லெனினிஸக் கொள்கைகளுக்கு விசுவாசமாக | 03 |
| | வார்சா ஒப்பந்த அங்கத்துவ நாடுகளின் அரசியல் பிரகடனம் | 16 |
| மார்க்ஸியம் லெனினியமும் எமது காலமும் | வஸிலி அகுஃபனேவ் முதலாளித்துவ மற்ற வளர்ச்சிப் பாதை பற்றி மார்க்ஸிய-லெனினியம் | 27 |
| சோவியத் சமுதாயம் வாழ்வும் பிரச்னைகளும் | சோவியத் உணவுத் திட்டமும் அதன் சர்வதேச முக்கியத்துவமும் | 31 |
| வரலாறும் அனுபவமும் | ஒரு சிறு தீப்பொறி ஓர் பெருஞ்சுவாலையாகும் | 34 |
| வாலிபர் உலகம் | இரு தலைமுறைகளின் நோக்கில் யுத்தமும் சமாதானமும் | 39 |
| வளரும் நாடுகளின் இன்றைய பிரச்னைகள் | நெல்லி மலிஷேவா வளர்ச்சிப் பாதையில் சில கசப்பான அனுபவங்கள் | 43 |
| | ஜெனடி சுப்றின் ஆசியாவில் பொருளாதார ஒருமைப்பாடு | 48 |
| | 80களில் அணிசேரா இயக்கம் | 53 |
| ஏகாதிபத்தியத்தின், சுயரூபம் | வி ஒவ்சின்னிகோவ் ''மூலவள போராட்டம்'' அதன் பின்னணியில் | 58 |
| சித்தாந்த அரங்கு | சமாதானமும், சமாதான சகவாழ்வும் | 61 |




யூரி அந்தரபோவ்

# லெனினிஸக் கொள்கைகளுக்கு விசுவாசமாக

**1982 நவம்பர் 22ந் திகதி நடைபெற்ற சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் முழு நிறைவுக் கூட்டத்தில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி பொதுச்செயலாளர் யூரிஅந்ரபோவ் ஆற்றிய உரை.**

ஐந்தாண்டு காலகட்டத்தின் அடுத்துவரும் ஆண்டுக்கான நகல் வரவு-செலவுத் திட்டம் பற்றிய விவாதத்தை நாம் முடித்துவைக்கிறோம்.

நகல் வேலைத் திட்டத்துக்கு இயல்பாயிருப்பது எது? அது பொருளாதார வளர்ச்சி வீதங்களை விரிவுபடுத்தவும் தேசிய வருமானம், தொழிற்துறை மற்றும் விவசாய உற்பத்தியிலும் சில்லறைப் பொருட்களின் உற்பத்தி அளவிலும் முழுமையான உயர்வுத் தொகைகளை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. பொருளாதாரத்தின் ஆற்றலை உயர்த்தத் தொடர்ந்தும் உழைப்பதற்கு வகைசெய்யப்பட்டிருக்கிறது. பொருளாயதச் செலவு மற்றும் உழைப்புச் செல்வாதாரங்களில் ஒப்பீட்டளவிலே குறைவான அதிகரிப்புடன் கடுமையான கடமைப் பொறுப்புகளை நடைமுறைப்படுத்தியாக வேண்டும்.

மக்களின் நல்வாழ்வை உயர்த்தும் திசையிலான கட்சியின் போக்கு நகலில் பேணிக்காக்கப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்துவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தொகுதி ரீதியான தொழில்களில் முதனிலை வளர்ச்சியையும் பாவனைப் பொருட்களின் உற்பத்தியில் அதிகரிப்பையும் உறுதி

செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. விவசாய—தொழில் தொகுப்பின் மேலும் அபிவிருத்திக்காக பெரும் பொருளாயத, நிதிச் செல்வாதாரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மக்களின் மெய்வருமானம் தொடர்ந்து அதிகரிக்கும். வீட்டு வசதி நிர்மாண அளவுங்கூட ஐந்தாண்டுத் திட்ட இலக்குகளுக்கு ஒத்திருக்கிறது.

இவ்விதம், சோவியத் மனிதனுக்கான, அவனது வேலை, வாழ்க்கை நிலைமைகள் மற்றும் தார்மீக வளர்ச்சிக்கான அக்கறை கட்சியின் முதன்மையான இலட்சியமாக இருந்து வருகிறது என்பதை நகல் திட்டம் ஊர்ஜிதம் செய்கிறது.

வழமைபோலவே பாதுகாப்புத் தேவைகளும் போதியளவுக்குக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, இன்றைய சர்வதேச நிலவரத்தில் இராணுவத்துக்கும் கடற்படைக்கும் தேவையான சகலதையும் வகை செய்வது கட்டாயமானது என அரசியற் குழு கருதிவந்திருக்கிறது; கருதுகிறது.

நகல் வரவு செலவுத் திட்டம் பொருளாதாரத்துக்கு நிதியிடுவதையும் சமூக-கலாசார வளர்ச்சியையும் உறுதி செய்கிறது.

பொருளாதர வளர்ச்சி விஷயங்கள் சம்பந்தமாக லியோனிட் இலியிச் பிரெஷ்னேவ் இறுதியாக ஆற்றிய உரைகளையும் மத்தியக் கமிட்டியின் அரசியல் குழுவுக்கு அவர் சமர்ப்பித்த குறிப்புகளையும் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் நினைவிற் கொண்டுள்ளனர். பிரச்சினை இவ்வாறுதான் முன்வைக்கப்பட்டது: கட்சிக் காங்கிரசுகளிலும் மத்தியக் கமிட்டியின் முழு நிறைவுக் கூட்டங்களிலும் விஞ்ஞான ரீதியாக ஆதாரப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கையை நாம் வகுத்துள்ளோம். உற்பத்தி ஆற்றலை உயர்த்தும் திசையில், அதன் உள்ளியல் பாக்கத் திசையில் ஆன போக்கை எடுத்திருக்கிறோம். ஆனால் எமது பொருளாதாரத்தை இப்போக்குகளுக்கு மாற்றுவதும், ஆற்றலின் திசையிலான திருப்பமும் இன்னும் மெதுவாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

பொருளாதாரத்தின் ஆற்றலை சுட்டிக் காட்டும் தலையாய அம்சம்—உழைப்பு உற்பத்தி—எம்மைத் திருப்திப்படுத்த முடியாத வீதத்தில் வளர்கிறது. மூலப்பொருள் அபிவிருத்தி மற்றும் பதனிடல் பிரிவுகளுக்கு இடையில் போதிய அளவு ஒருங்கிணைப்பு இல்லாமை பற்றிய பிரச்சினை இன்னும் இருந்து வருகிறது. உற்பத்தியின் பொருளாயத உள்ளியல்பாக்கத் தன்மை சகலவிதத்திலும் மறைந்துவிடவில்லை.



பெரும் செலவுகள் மற்றும் உற்பத்திச் செலவுகளை விலையாகக் கொடுத்துத்தான் திட்ட இலக்குகள் தொடர்ந்தும் சமாளிக்கப்படுகின்றன. பொருளாதாரம் சிக்கனம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்ற லியோனிட் பிரெஷ்னேவின் பிரசித்தமான சொற்களை மனமார மேற்கோள் காட்டும் அதேசமயம், இந்தக் கடமையைச் சாதிப்பதற்குச் சிறிதளவே பணிபுரியும் பொருளாதார முகாமையாளர்கள் பலர் இன்னும் இருக்கின்றனர்.

வெளிப்படையாகச் சொன்னால் ஊக்கமின்மையும், பழைய வழிகள் மீதான பற்றும் இன்னும் இருக்கவே செய்கின்றன. இவற்றுக்கும் மேலாக, சிலபேர் வேலையை எவ்வாறு செய்வது என்பதைத் தெரியாமலே இருக்கின்றனர். அத்தகைய தோழர்களுக்கு அளிக்கப்பட்டாக வேண்டிய உதவி குறித்து சிந்தனைசெய்ய வேண்டும். ஆயினும், பிரதான விஷயம் யாதெனில் நிர்வாகம், திட்டமிடல் மற்றும் பொருளாதாரப் பொறியமைவு உட்பட பொருளாதார நிர்வாகத்துறை முழுவதையும் மேம்படுத்தும் பணியை விரைவுபடுத்துவதுதான்.

தரத்தையும் உற்பத்திப் பணியையும் முன்முயற்சியையும் தொழிலகத்தையும் ஊக்கப்படுத்துவதற்குப் பொருளாதார, ஸ்தாபன சூழ்நிலைகளை வகைசெய்ய வேண்டும். இதற்கு எதிர்நிலையாக, போலிவேலை, செயலூக்கமின்மை, பொறுப்பின்மை ஆகியன தொழிலாளர்களின் சம்பாத்தியங்கள், அதிகாரபூர்வ அந்தஸ்து மற்றும் தார்மீகக் கௌரவத்தின் மீது உடனடியானதும் தவிர்க்கமுடியாததுமான தாக்கத்தைக்கொண்டிருக்க வேண்டும்.

அரசு முழுமையினதும் அனைத்து மக்களினதும் நலன்களை முறைப்படி நிறைவேற்றுவதற்கான பொறுப்புணர்வு உயர்த்தப்படவேண்டும்; திணைக்களவாதமும் குறுநோக்குவாதமும் வன்மையாகக் களையப்படவேண்டும். ஒரே பிரச்சினை பற்றிய எந்தவொரு புதிய தீர்மானமும் முன்னைய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அல்லது புதிய சந்தர்ப்ப சூழ்நிலைகள் தோன்றியதன் பின்னர் மாத்திரமே எடுக்கப்படவேண்டும் என்பது ஒரு விதியாக மாற வேண்டும். கட்சி, அரசு மற்றும் உழைப்பு ஒழுங்கு விதியின் எந்த மீறலையும் கடுமையாக எதிர்த்துப் போரிட வேண்டும். எமக்கு கட்சியினதும் தொழிற்சங்க ஸ்தாபனங்களினதும் முழுமையான ஆதரவு அனைத்து சோவியத் மக்களினதும் ஆதரவுகிடைக்கும் என்பதில் நான் நிச்சயமாக உள்ளேன்.

பிற்காலங்களில் இணையங்கள், தொழிலகங்கள், கூட்டு மற்றும் அரசாங்கப் பண்ணைகளின் சுதந்திரத்தை விஸ்தரிப்பதன் அவசியம்பற்றி மிகப் பெருமளவுக்குப்

பேசப்பட்டிருக்கிறது; இந்தப் பிரச்சினையை நடைமுறையில் கையாளும் தருணம் வந்துவிட்டதாகத் தோன்றுகிறது. இவ்விஷயம் சம்பந்தமாக அரசியல் குழு அமைச்சரவைக்கும் அரசாங்கத் திட்டக் குழுவுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளது. இங்கு கவனமாகச் செயல்படுவதும், அவசியமாயின் பரிசோதனைகளை நடத்துவதும், மதிப்பீடுகளைச் செய்வதும், தோழமை நாடுகளின் அனுபவத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்வதும் அவசியமாகும். எவ்வாறாயினும் சுதந்திரத்தை விஸ்தரிப்பதானது பொறுப்பை அதிகரிப்பதுடனும், அனைத்து மக்களினது நலன்களுக்கான அக்கறையுடனும் கலக்கப்படவேண்டும்.

தேசியப் பொருளாதாரத்தில் நாம் பெருமளவு ஒதுக்கங்களைக் கொண்டுள்ளோம். இன்றைய உரைகளில் இவை குறிப்பாகச் சுட்டிக் காட்டப்பட்டன. இந்த ஒதுக்கங்களை விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதிலும் உற்பத்தியில் விஞ்ஞான, தொழில்நுட்பச் சாதனைகளை மற்றும் விருத்தியடைந்த அனுபவத்தைப் பெருவீதத்திலும் துரிதமாகவும் புகுத்துவதிலும் நாடிச் செல்லவேண்டும். இப்பிரச்சினை புதியதல்ல என்பது வாஸ்தவமே. இது கட்சிக் காங்கிரசுகளிலும் மத்தியக் கமிட்டியின் முழு நிறைவுக் கூட்டங்களிலும் பலமுறை எழுப்பப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் முன்னேற்றம் மெதுவாக உள்ளது? ஏன், இதற்கான பதிலும் முன்பே தெரிந்ததுதான். புதிய முறையை அல்லது புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்துவதற்கு ஏதாவதொரு வழியில் உற்பத்தியை மறுகட்டமைப்பு செய்தாகவேண்டும்; மேலும் இது திட்ட இலக்குகளின் நிறைவேற்றத்தையும் பாதிக்கிறது. யாவற்றுக்கும் மேலாக, உற்பத்தித் திட்டங்களின் தோல்விக்காக நீங்கள் கண்டிப்புக்கு உட்படலாம். ஆனால் புதிய தொழில்நுட்பம் மிகக்குறைவாக அறிமுகஞ் செய்யப்பட்டமைக்காக மாத்திரம் பேசவும்படலாம்.

புதிய தொழில்நுட்பம் மற்றும் புதிய வேலை முறைகளைப் புகுத்துவதனை நாம் உண்மையிலேயே முன்னேற்ற வேண்டுமானால் விஞ்ஞானப் பேரவை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துக்கான அரசாங்கக் கமிட்டி, அமைச்சுக்கள் ஆகிய பொருளாதார முகாமைத்துவ அமைப்புகள் அவற்றை வெறுமனே பிரசித்தம் செய்வதோடு மாத்திரமல்லாமல் அவற்றை இனங்காட்டவேண்டும். விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையிடும் மெய்யான சிரமங்களைக் களைய வேண்டும். விஞ்ஞானம் மற்றும் உற்பத்தியின் கூட்டு திட்டமிட்ட முறைகள் மூலம் பொருளாயத ஊக்க அமைப்பு மூலமும் ஊக்குவிக்கப்பட வேண்டும். புதிய தொழில்நுட்பத்தைத் தைரியத்துடன் அறிமுகஞ் செய்பவர்கள் தாமே பிரதிகூல நிலைமையில் இல்லாமல் இருக்கும் நிலவரத்தைத் தோற்றுவிப்பது அவசியமாகும்.



பொருளாயத, உழைப்புச் செல்வாதாரங்களை அறிவார்ந்த முறையில் பயன்படுத்துவது மற்றுமொரு பாரிய ஒதுக்கமாகும். 1983ம் ஆண்டிற்கான திட்டம் இந்த செல்வாதாரங்களைச் சேமிப்பதற்கான அதியுயர்ந்த இலக்குகளைக் குறிக்கிறது, இப்போது பொருளாயத செல்வாதாரங்களைச் சேமிக்கும் பிரச்சினையை நான் சேமித்துவிட்டேன், நன்று, நான் சேமிக்கவில்லை, மோசமில்லை என்றவாறு அல்லாமல் புதிய நிலைமையில் கருத்திற்கொள்ள வேண்டும் என்ற அம்சத்தைத் தோழர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

இன்று சேமிப்பானது, மக்களின் சேமநலத்துக்கான சிக்கன மனோபாவமானது எமது திட்ட இலக்குகள் எதார்த்தமாக இருக்கின்றன என்பதற்குச் சமமாகிறது. இப்பிரச்சினைக்கான தீர்வு முதன்மையாக சோவியத் ஒன்றியத்தின் அரசாங்கத் திட்டக்குழு பொருளாயத மற்றும் தொழில்நுட்ப சப்ளைக்கான அரசாங்கக குழு அமைச்சுக்கள் திணைக்களங்களினால் எடுக்கப்படவேண்டிய நடைமுறை நடவடிக்கைகள் முழுவதினாலும் உறுதி செய்யப்படவேண்டும். சகல கட்சி ஸ்தாபனங்களாலும் பெரும் பணியாற்றப்படவேண்டியுள்ளது.

ஆக்கப் பணி மற்றும் மக்களின் வளத்தின்பால் உண்மையிலேயே சிக்கனமான மனோபாவம் ஆகியவற்றுக்கு எம்மிடம் பல சிறப்பான உதாரணங்கள் உண்டு. இந்த அனுபவம் சரியான முறையில் பரப்பப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். அதேசமயம், இங்கு குறிப்பிட்ட செலவுகளும் அவசியப்படவில்லை. இதன் பொருள் வேறொரு விஷயம் இல்லாமல் இருக்கிறது என்பதுதான். அதாவது, தவறான நிர்வாகத்துக்கும், விரயத்துக்கும் எதிராக முன்முயற்சியும் உறுதியான போராட்டமும் இல்லாமல் இருக்கிறது என்பதுதான்.

உண்மையில் இந்தக் கடமையை ஒவ்வொரு தொழிலாளியினதும், எமது தொழிலகங்கள் கூட்டு—அரசாங்கப் பண்ணைகளில் வேலை செய்யும் ஒவ்வொருவரினதும் பங்கேற்புடன் மாத்திரமே சாதிக்கமுடியும். இந்தக் கடமையைத் தமது சொந்த இலட்சியம் என்று அவர்கள் உணர்வதை உறுதிசெய்வதற்கு நாம் முயலவேண்டும்.

தொகுத்துக் கூறினால், தேசியப் பொருளாதாரத்தில் பக்குவமான கடமைகள் பல உள்ளன. அவற்றுக்கான தீர்வுக்கு எம்மிடம் உடனடி நிவாரணம் இல்லை என்பது வாஸ்தவமே. அவற்றுக்கான பதிலை உள்நாட்டு மற்றும் உலக அனுபவத்திலிருந்து பொது முடிவுகளை வகுப்பது மூலமும், மிகச் சிறந்த நடைமுறைத் தொழிலாளர்கள். விஞ்ஞானிகளின் அறிவைத் திரட்டுவதன் மூலமும் நாம் அனைவரும் கட்சியின் மத்தியக் கமிட்டியுந்தான் கண்டாக வேண்டும். சுருக்கமாகச் சொன்னால்

சுலோகங்களினால் மாத்திரமே விவகாரங்களை நடத்திவிட முடியாது. அதற்குக் கட்சி ஸ்தாபனங்கள், பொருளாதார நிர்வாகிகள் மற்றும் இயந்திரவியல். தொழில்நுட்ப ஆளணிகளின் பெருவீத ஸ்தாபனப்பணி அவசியம். ஏனெனில், இந்த மிகப் பரந்த முக்கியமான கடமைகள் ஒவ்வொரு பொருளாதாரத் துறையினதும் முகாந்திரத்தில் மாத்திரமன்றி, ஒவ்வொரு தொழிற்சாலை பட்டறை. உற்பத்திப் பிரிவு மற்றும் ஒவ்வொரு வேலைத்தளத்தினதும் முகாந்திரத்தில் பகுப்பாய்வுசெய்யப்படவுள்ளன.

இப்பிரச்சினைகள் எமது நாட்டிற்கு முதன்மையான முக்கியத்துவமானது—ஜீவாதாரமானது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அவற்றை நாம் வெற்றிகரமாகத் தீர்த்தால் பொருளாதாரம் தொடர்ந்து வளரும், மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

உணவு வேலைத் திட்டத்தின் நிறைவேற்றத்துடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் எமது திட்டங்களுக்கு மையமானவையாகும்.

மத்தியக் கமிட்டியின் 1982 மே முழுநிறையுக் கூட்டத்தின் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் சிக்கலான நிலைமையில் எடுக்கப்படவுள்ளன. இந்த ஆண்டிலுங்கூடக் காலநிலை எமக்கு சாதகமானதாக இல்லை. இது விவசாயத் தொழிலாளர்களை அவர்களின் அர்ப்பணிக்கப்பட்ட முயற்சிகளைக் கூடுதல் முக்கியத்துவமிக்க தாக்குகிறது. இதன் காரணமாகவும் விவசாயத்தின் பொருளாயத, தொழில்நுட்ப அடித்தளத்தை வலுப்படுத்துவதன் காரணமாகவும் பல பிராந்தியங்களும் பிரதேசங்களும் குடியரசுகளும் நல்ல பெறுபேறுகளை ஈட்டியுள்ளன. கடந்த ஆண்டுகளைவிட தானிய மகசூல் கூடியுள்ளது. பருத்தி, திராட்சை, மரக்கறியின் விளைச்சலும் அதிகரித்துள்ளது. பால், முட்டை உற்பத்தி அதிகரித்துள்ளது. தொழிற்துறை ஆலைகளின் துணைப் பண்ணைகள் வலிமைபெற்று வருகின்றன. சொந்தத் துணைத் துண்டுக் காணிகளின் அபிவிருத்திக்கான அக்கறையும் தன்னைத்தானே நியாயப்படுத்தி வருகிறது. அதேசமயம், சில உற்பத்திப் பொருட்களின் விநியோகத்தில் உள்ள தங்குதடைகள் இன்னும் அகற்றப்படவில்லை.

நாட்டின் உணவு வேலைத் திட்டத்தை ஓராண்டுக்குள் நிறைவேற்றிவிட முடியாது என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்கின்றனர் என்பது வாஸ்தவமே. ஆனால் உணவு வேலைத்திட்டத்தின் நிறைவேற்றத்தை இழுத்தடிக்கக் கூடாது என்பதையும் நாம் வலுயுறுத்திக் கூறியாக வேண்டும். விவசாய—தொழிற் தொகுப்பின் தொழிலாளர்கள் தமது முயற்சிகளை நாளுக்கு நாள் அதிகரித்து



பணியாற்ற வேண்டும். இதனால் இக்கடமையைச் சாதிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் பிரமாண்டமான செல்வாதாரங்கள் இன்றே அவற்றின் பலன்களைத் தரவும் வருங்காலத்தில் இன்னும் கூடுதலான பலன்களைத் தரவும் முடியும்.

அடுத்த ஆண்டுக்கான திட்டங்களைப் பரிசீலனை செய்யவிருக்கும் கட்சிக் குழுக்களின் முழு நிறைவுக் கூட்டங்களும், கட்சிப் பணியாளர்களின் கூட்டங்களும் மக்கள் பிரதிநிதிகள் சோவியத்துக்களது கூட்டத் தொடர்களும் மத்தியக் கமிட்டியின் 1982 மே மாத முழுநிறைவுச் கூட்டத் தொடர் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் முன்னேற்றம் காண்பது பற்றி விவாதிக்கவேண்டும் என்று அரசியல் குழு நம்புகிறது. பொருளாதாரத்தின் இந்த முக்கியமான பிரிவில் மேற்கொள்ளப்படும் சகல நடைமுறை நடவடிக்கைகளும் உணவு வேலைத் திட்டத்தின் முகாந்திரத்தில் மதிப்பீடு செய்யப்படுவது அவசியமாகும்.

விவசாய ஆண்டை வெற்றிகரமாகப் பூரணப்படுத்துவது, பெறப்பட்ட விளைச்சலைப் பேணிக்காப்பது, அடுத்த ஆண்டின் அறுவடைக்கான அடிப்படைப் பணியை மேற்கொள்வது, வெற்றிகரமான கால்நடை வளர்ப்பை உறுதி செய்வது ஆகியவற்றின் அவசியம் பற்றி நான் அதிகம் பேசப் போவதில்லை. புதிய பிரச்சினைகளின் தீர்வுக்கு உடனடியாக மாறிச் செல்வதும் இரண்டாந்தரக் கடமைகள் இல்லாத ஒரு தொகுப்பை நாம் பெற்றிருக்கிறோம் என்ற உண்மையைத் தக்க முறையில் கணக்கில் எடுத்துக் கொண்டு விவசாயத்—தொழில் தொகுப்பு வளர்ச்சியின் அடிப்படைத் திசைவழிகளுடனான நெருங்கிய உறவில் அவற்றைப் பரிசீலனை செய்வதும் அவசியம்.

1983 ஆம் ஆண்டிற்கான திட்டம் உற்பத்தியின் அதிகரிப்புக்கும் பாவனைப் பொருட்களது தரத்தின் மேம்பாட்டுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. இப்பிரச்சினையையே லியோனிட் இலியிச் பிரெஷ்னேவ் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாக எண்ணினார். இங்குள்ள கடமை பாவனைப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பது யாத்திரமல்ல, ஆனால் அவற்றின் தரத்தைக் கணிசமாக மேம்படுத்துவதுமாம். இது மற்றும் உள்ளூர்த் தொழில்களுக்கு மாத்திரமன்றி கனரக மற்றும் பாதுகாப்புத் தொழில்களில் உள்ள ஆலைகளுக்கும் பொருந்துகிறது.

தோழர் பாய்பகோவ் இங்கு மிகச் சரியாகக் கூறியதைப்போல ஸ்தலக் கட்சி, அரசாங்க அமைப்புகள் பாவனைப் பொருட்களின் உற்பத்தியோடு நேரடியாகவே அக்கறை செலுத்த வேண்டும். பல சாதாரணப் பொருட்

களின் உற்பத்திப் பிரச்சினைகள் ஏறக்குறைய சோவியத் ஒன்றியத்தின் அரசாங்கத் திட்டமிடல் குழுவினாலேயே தீர்க்கப்படுவதால் அதை மாமூலானதாக நாம் கருத முடியாது. இவ்விஷயங்களுக்கு ஸ்தல அமைப்புகள் தாமே அக்கறை செலுத்துவதும் அவற்றைக் கையாள்வதற்கு முழுப் பொறுப்பை ஏற்பதும் அவசியமாகும்.

அடிப்படைத் தொழில்களின் சில முக்கியமான அபிவிருத்திப் பிரச்சினைகள் குறித்துப் பேச என்னை அனுமதியுங்கள். எரிபொருள், விசைத் தொகுப்பின் மேலும் வளர்ச்சியுடன் இதைத் தொடங்குகிறேன். 1983ல் மூலாதார விசைச் செல்வாதாரங்களில் சுமார் 410 லட்சம் தொன் எரிபொருள் அதிகரிப்புக்குத் திட்டமிடப்பட்டிருப்பது ஏதார்த்தமானதே. அது சகல விசை அமைப்புக்களினதும் தங்குதடையற்ற, மாமூலான பணியை உறுதி செய்வதனைச் சாத்தியமாக்குகிறது. நிலக்கரி, இயற்கை வாயு, எண்ணெய், பெட்ரோ—பொருட்கள், வெப்பம் மற்றும் மின்சக்தியைச் சிக்கனமாகப் பாவிப்பது குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

உண்மையில் இது எல்லாத் துறைகளிலும் ஒரு சில புனரமைப்புக்கு, முதலாவதாகவும் முதன்மையாகவும் விசை சேமிப்பு தொழில்நுட்பம் மற்றும் உற்பத்திப் போக்குகளின் பெருவீத அறிமுகத்துக்கு, பேம்படுத்தப்பட்ட வீதங்களுக்கு, சிக்கனத்துக்குரிய போராட்டத்தில் பொருளாயத, தார்மீக ஊக்குவிப்புகளைப் பயன்படுத்துவதற்கு, மிகையான செலவுகளின் பால் கண்டிப்பான மனோபாவத்துக்கு, வீதங்கள் மற்றும் வரம்புகளை அதிகரிப்பதற்கு அறைகூவல் விடுக்கிறது.

விசை சம்பந்தமான நிலைக் குழுக்களை ஒன்றிய சோவியத்திலும் அமைக்க அடுத்துவரும் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் கூட்டத் தொடரில் ஆலோசனை சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இக்குழுக்கள் அமைச்சுகளின் பணியைக் கண்காணிக்கவும், செல்வாதாரங்களின் பாவனையை விரயப்படுத்துவதற்காக எந்தத் தரத்தில் உள்ள பொருளாதார நிர்வாகிகளையும் வகை சொல்லச் செய்யவும் முடியும்.

தொழிலகங்களில் அத்தகையக் கட்டுப்பாட்டின் அமைப்பைக் கண்காணிப்பதற்காகப் பிரதேசங்கள், பிராந்தியங்கள் மற்றும் குடியரசுகளில் அமைக்கப்பட்ட குழுக்களின் பணிக்குப் புத்துயிரளிக்க வேண்டும்.

அரசியல் குழு போக்குவரத்து நிலவரம் குறித்து கவலைகொண்டுள்ளது: எரிபொருள், மரம் மற்றும் பிற பொதிகளின் போக்குவரத்தில் புகையிரத அமைச்சு



தேசியப் பொருளாதாரத் தேவைகளை இன்னும் நிறைவு செய்யவில்லை. இது சம்பந்தமான பல சமிச்ஞைகள் ஸ்தல அரசாங்கப் பொருளாதார நிர்வாக உறுப்புக்களிலிருந்து சோ. க. க. மத்தியக் கமிட்டிக்கு வந்து கொண்டிருக்கின்றன. இது இன்றைய மத்தியக் கமிட்டி முழு நிறைவுக் கூட்டத்திலும் குறிப்பிடப்பட்டது.

புகையிரத அமைச்சுக்கு அரசாங்கம் கணிசமான உதவியை அளித்து வந்தபோதிலுங்கூட புகையிரதப் பாதைகளின் செயல்பாடு ஆண்டுக்காண்டு மோசமடைந்து வருவது வருந்தத்தக்கதாகும். இந்த அமைச்சுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மூலதன நிதியீடுகளின் அளவு 1975ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 43 சதவீதமும், டீசல் மற்றும் மின்சார ரயில் இயந்திரங்களின் எண்ணிக்கை 23 சதவீதமும் அதிகரித்துள்ளன.

புகையிரதத் தொழிலாளர்களின் சமூக நிலைமைகளை மேம்படுத்துவது, போக்குவரத்துப் பொறியமைவினைச் செம்மையாக்குவது பற்றி சோ. க. க. மத்தியக் கமிட்டியும் அரசாங்கமும் பல தீர்மானங்களை எடுத்திருக்கின்றன. எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் இன்னும் சரியான பலனைத்தரவில்லை.

புகையிரத என்ஜின்களின் பழுதுபார்ப்புகளும் பாவனையின் ஒழுங்கமைப்பும், போக்குவரத்து ஒழுங்கமைப்பும் புகையிரத அமைச்சில் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் உள்ளன. இம் முழுநிறைவுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கண்டனத்திலிருந்து அமைச்சகத் தலைமை மாத்திரமன்றி சோவியத் அமைச்சரவையும் சோ.க,க. மத்தியக் கமிட்டியுங்கூட கருத்தாழமுள்ள முடிவுகளை வகுக்கவேண்டியிருப்பது வெளிப்படையானதே.

இரும்புக் கலப்புள்ள உலோகவியலில் மிக அடிக்கடி பின்னடைவுகள் ஏற்படுகின்றன. கடந்த ஆண்டில் இத்தொழிற்துறை அதன் திட்ட இலக்குகளை நிறைவேற்றவில்லை. இந்த ஆண்டிலும் நிலைமை இதுதான். தேசியப் பொருளாதாரம் பல இலட்சக்கணக்கான தொன் உருட்டப்பட்ட இரும்பைப் பெற்றிருக்கவில்லை. இத்தொழிற்துறை நிலவரத்துக்கான பொறுப்பை முதலாவதாக, இரும்புக் கலப்புள்ள உலோக்வியல் அமைச்சே ஏற்றாக வேண்டும். ஸ்தூலமான சிரமங்களும் இருக்கின்றன என்பது வாஸ்தவமே. நிலையிருப்புச் சொத்துக்களின் பெரும்பகுதிக்குப் புனர்நிர்மாணமும் நவீனமாக்கமும் இந்த அமைச்சுக்குத் தேவைப்படுகிறது. அரசாங்கத் திட்டக் கமிட்டி, பொருளாயத, தொழில்நுட்ப சப்ளைக்கான அரசாங்கக் கமிட்டி மற்றும் இயந்திரவியல் அமைச்சுக்களிலிருந்து மிகப் பெரிய உதவி தேவைப்படுகிறது.

நாம் பொருளாதார வளர்ச்சிக்காகவும் புதிய உற்பத்தி ஆற்றல்களின் நிர்மாணத்துக்காகவும் வீட்டு வசதி, கலாச்சாரம் மற்றும் சமூகத்திட்டங்களைக் கட்டுவதற்காகவும், மிகப் பெருமளவில் செல்வாதாரங்களை ஒதுக்கீடு செய்துள்ளோம். அவற்றைச் செயலூக்கமுடன் பயன்படுத்துவது தலையாய முக்கியத்துவம்வாய்ந்த கடமையாகும். அதேசமயம் மூலதன நிர்மாணத்தில் ஓரளவு பிரச்சினைகள் இருந்து வருகின்றன. பல்வேறு திட்டங்களுக்கிடையே சக்திகளும் செல்வாதாரங்களும் சிதறிப் போவதை மேலும் கூடுதல் உறுதியுடன் எதிர்த்தாக வேண்டும். புனர்நிர்மாணம் மற்றும் நவீனமாக்கத்தின் பங்கு அதிகரிக்கப்பட வேண்டும்: புதிய நிர்மாணத் திட்டங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும். நிர்மாண ஒழுங்கமைப்பிலும் நாம் பல வழிகளில் திருப்தி கொண்டிருக்கவில்லை. இங்குள்ள குறைபாடுகள், புதிய உற்பத்தி உள்ளாற்றல்களைச் செயலில் ஈடுபடுத்துவதற்கான திட்ட இலக்குகளை நிவர்த்திப்பதில் ஆண்டுக்காண்டு தோல்விகளையே ஏற்படுத்துகின்றன. நிர்மாணத்துடன் சம்பந்தப்பட்ட பல அமைச்சுக்களின் பொருளாயத, தொழில்நுட்ப அடித்தளத்தை வலுப்படுத்துவதற்குக் கணிசமான நிதி வளங்களையும், இயந்திர சாதனங்களையும் அரசாங்கம் ஒதுக்கி வைத்துள்ளபோதிலுங்கூட அந்த அமைச்சுக்கள் நிர்மாணம் மற்றும் பொருத்து வேலைகளின் அளவைக் குறைக்கின்றன. நிர்மாணம் மற்றும் பொருத்து வேலையின் தரம் பல விஷயங்களில் மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. கட்டட ஸ்தாபனங்கள் போதியளவு சிறப்பாகச் செயற்படவில்லை.

இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்காக அநேக தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவை வழுவாமல் நிறைவேற்றப்பட வேண்டும். மூலதன நிர்மாணத்தைச் சிறப்பான முறையில் குறைப்பது தேசியப் பொருளாதாரத்தின் மையக் கடமைகளில் ஒன்றாகும்.

எமது சமுதாயத்துக்கும் எமது மக்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதாரத்தின் பிற துறைகள், பிரிவுகள் அனைத்தைப் பற்றியும் நான் இன்று பேசப்போவதில்லை. ஒவ்வொரு அமைச்சகமும் ஒவ்வொரு திணைக்களமும் விவகாரங்களின் நிலவரத்தை மீண்டும் மீண்டும் ஆராயவேண்டும்; இருந்துவரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் திட்டமிட வேண்டும்; நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட பிரிவு இடையறாது அதிகரித்துவரும் சமுதாயத் தேவைகளை எந்த அளவுக்குத் திருப்தி செய்கிறது என்பதுதான் அவற்றின் பணியை மதிப்பீடுசெய்வதற்குரிய பிரதான கட்டளை விதியாக இருக்க வேண்டும். பொருளாதாரத்தின் துரிதமான உயர்வு, மக்களது வாழ்வின் மேம்பாடு ஆகிய இரண்டும் சோவியத் மக்களுக்கான

பல்துறைப் பயிற்சி நிலையம்



எமது கடமைகள். ''பிரச்சினையை இவ்விதம் முன்வைக்கும் கட்சியானது பொருளாதாரக் கொள்கை மூலமே உலகப் புரட்சிகர நிகழ்வுப்போக்கின் மீது எமது பிரதான செல்வாக்கைச் செலுத்துகிறோம்'' என்ற லெனினின் தொலைநோக்குள்ள அதிகார ஆணையால் வழிகாட்டப்படுகிறது.

லியோனிட் இலியிச் பிரெஷ்னேவின் மரணம் சர்வதேச விவகாரங்களில் சோ. க. க.வினதும் சோவியத் அரசினதும் வருங்காலக் கொள்கை சம்பந்தமாக வெளிநாடுகளில் பெருமளவு ஊகங்களை ஏற்படுத்தியிருக்கிறது. சமீப ஆண்டுகளில் நானாவிதமான கெடுநோக்குள்ள திட்டங்களுக்கு சோவியத் யூனியனைச் சாட்டாகக் கூறவும் எமது கொள்கையை இப்போது ஓர் அரசினதும் பின்னர் மற்றொன்றினதும் பந்தோபஸ்தை இடருக்குள்ளாக்கும் ஆக்கிரமிப்புக் கொள்கையாகச் சித்திரிக்கவும் எத்தனை முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பாருங்கள். ஆனால் இக்கொள்கை இப்போது மாறிவிடாமல் இருக்கவேண்டும் என்று அவர்கள் கவலைப்படுவதாகத் தெரிகிறது. இக்கொள்கையைத் தொடர்வதானது சர்வதேச அரங்கில் சமாதானத்துக்கும் அமைதிக்கும் ஓர் முக்கியமான முன் நிபந்தனையாகக் காணப்படுகிறது.

சோவியத் வெளிநாட்டுக் கொள்கை எமது கட்சியின் 24-வது 25-வது 26வது- காங்கிரசுகளின் தீர்மானங்களினாலேயே நிர்ணயிக்கப்பட்டு வந்துள்ளது; தொடர்ந்தும் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை நான் முழுப் பொறுப்புணர்வுடன் கூறியாக வேண்டும். எமது வெளிநாட்டுக் கொள்கையின் வேறுபடா நோக்கங்கள் நீடித்த சமாதானத்தை உறுதி செய்வதும் சுதந்திரம் மற்றும் சமூக முன்னேற்றத்துக்கான மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுமாகும். இந்த இலட்சியங்களுக்கான போராட்டத்தில் கட்சியினதும் அரசினதும் தலைமை அதன் கோட்பாடுகளுக்கு ஏற்ப முரணின்றியும் சிந்தனையுடனும் செயல்படும்.

இன்றைய சர்வதேச நிலவரத்துக்கு இயல்பாகவுள்ள சிரமங்களையும் பதற்றத்தையும் சமாளிக்க முடியும்: நிச்சயம் சமாளித்தாக வேண்டும் என்று நாம் நினைக்கிறோம். மனித குலம் தனது எதிர்காலத்தை இடர்நிலையில் ஆழ்த்துவதற்கு விரும்பினாலன்றி, அதனால் ஆயுதப் போட்டி மற்றும் போர்களுடன் முடிவில்லாமல் இணங்கிப்போக முடியாது. கருத்துக்களின் பிணக்கு நாடுகள், மக்களுக்கிடையிலான மோதலாக வளர்வதை சோ.க.க. விரும்பவில்லை. அதற்கு ஆயுதங்களும், சமூக அமைப்புகளது உள்ளாற்றல்களின் அளவுகோலாக மாறுவதற்கு அவற்றைப் பயன்படுத்தும் தயார் நிலையும் தேவையில்லை.

ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் திட்டங்கள் எமது பந்தோபஸ்து உள்ளாற்றலைச் சரியான மட்டத்தில் பேணுவதற்கு அக்கறைகாட்ட, சோதர சோஷலிஸ நாடுகளுடன் சேர்த்து எம்மை நிர்ப்பந்திக்கின்றன. லியோனிட் இலியிச் பல தடவைகள் கூறியிருப்பதைப்போல இராணுவப் போட்டி எமது தெரிவல்ல; ஆயுதங்களற்ற உலகமே சோஷலிஸத்தின் இலட்சியம்.

சோஷலிஸக் கூட்டமைப்பை வலுப்படுத்துவதுதான் எமது கட்சியின் தலையாய அக்கறையாகத் தொடர்ந்து விளங்கும். ஐக்கியத்தில்தான் எமது வலிமை, மிகவும் சோதனைமிக்க வேளைகளிலுங்கூட இறுதி வெற்றியில் மெய்ப்பற்று தங்கியுள்ளது.

சோஷலிஸ நாடுகளது கூட்டமைப்பின் திட்டங்கள் எல்லாமே அமைதியான மற்றும் நிர்மாணத் திட்டங்களாகும். தோழமை நாடுகள் மத்தியில் சோதர ஒத்துழைப்பும் சோஷலிஸப் பரஸ்பர உதவியும், குறிப்பாக, விஞ்ஞானம் தொழில்நுட்பம் உற்பத்தி, போக்கு வரத்து,விசைமற்றும் பிற பிரச்சினைகளுக்குக் கூட்டாகத் தீர்வுகாண்பதில் ஆழமாகவும் கூடுதல் செயலூக்கமுடனும் வளர்வதை நாம் விரும்புகிறோம். இத்திசையில் மேலும் கூட்டு நடவடிக்கைகள் இப்போது திட்டமிடப்பட்டு வருகின்றன.

சோ.க.க.வும் சோவியத் அரசும் சகல சோஷலிஸ நாடுகளுடனும் உறவுகளை வளர்க்கவும் மேம்படுத்தவும் மனப்பூர்வமாக விரும்புகின்றன. பரஸ்பரம் நலலெண்ணம். ஒருவர் மற்றவரின் நியாயபூர்வ நலன்களுக்கு மரியாதை, சோஷலிஸம் மற்றும் சமாதான நலன்களுக்குப் பொதுவான அக்கறை ஆகியன பல்வேறு காரணங்களினால் பொருத்தமான நம்பிக்கையும் பரஸ்பரப் புரிந்துணர்வும் இன்னும் குறைவாக இருக்கின்றவற்றில்கூட சரியானதீர்வுகளை ஏற்படுத்தவேண்டும்.

இது எமது மாபெரும் அயல் நாடான மக்கள் சீனக் குடியரசையும் குறப்பிடுகிறது. தாஷ்கெந்திலும் பாகூவிலும் ஆற்றிய உரைகளில் லியோனிட் பிரெஷ்னேவ் வருத்தளித்த கருத்துக்கள், பொது உணர்வு மீது, பாரபட்சத்தின் செறிவைச் சமாளிப்பதன் அவசியம் மீது அவர் கொடுத்த அழுத்தம் ஆகியன எமது கட்சியின் திடவுறுதியை, முன்னேக்கிப் பார்க்கும் அதன் அபிலாஷையைத் தெரிவித்தன. இதற்கு சீனத் தரப்பிடமிருந்து ஸ்தூலமான பதிலுக்கு நாம் பெரும் கவனம் செலுத்துகிறோம்.

சர்வதேச வாழ்வில் அணிசேரா இயக்கத்தை உருவாக்கிய நாடுகளது தொகுதியின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. அவற்றில் பலவற்றுடன் சோவியத்



யூனியன் நட்புறவுப் பிணைப்புகளைக் கொண்டிருக்கிறது: இப்பிணைப்புகள் இரு தரப்புக்களுக்கும் பயன்தருகின்றன, உலகில் பெருமளவு ஸ்திரநிலையை ஏற்படுத்துகின்றன. இதற்கு ஓர் உதாரணம் இந்தியாவுடன் சோவியத் யூனியன் கொண்டுள்ள உறவுகள் ஆகும். காலனித்துவ ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெற்ற நாடுகளுடனும், தமது சுதந்திரத்தை உயர்த்திப் பிடிக்கும் நாடுகளுடனும் ஆன ஒருமைப்பாடு சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது; இருந்து வருகிறது.

சோவியத் ஆட்சியின் ஆரம்ப நாட்கள் முதலே சகல நாடுகளுடனும், மனப்பூர்வமான, நேர்மையான ஒத்துழைப்புக்குரிய தனது தயார் நிலையை எமது நாடு தெரிவித்து வந்துள்ளது. சமூக அமைப்புக்களில் நிலவும் வித்தியாசங்கள் இதற்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது. இரு தரப்புக்களிலுமே நல்லெண்ணம் இருக்கும்போது அவை முட்டுக்கட்டைகள் இல்லை, பல மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் சோவியத் யூனியனது அமைதிபூர்வ ஒத்துழைப்பின் வளர்ச்சியில் காணப்படும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இதற்கு திருப்திதரும் சான்றாகும்.

# வார்சா ஒப்பந்த அங்கத்துவ நாடுகளின் அரசியல் பிரகடனம்

பல்கேரிய மக்கள் குடியரசு, ஹங்கேரிய மக்கள் குடியரசு, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, போலிஷ் மக்கள் குடியரசு, ருமேனிய சோஷலிசக் குடியரசு, சோவியத் சோஷலிசக் குடியரசுகளது ஒன்றியம், செக்கோஸ்லோவாக்கிய சோஷலிசக் குடியரசு ஆகிய நாடுகளது உயர்மட்டப் பிரதிநிதிகள் 1983 ஜனவரி 4-5ம் தேதிகளில் பிராகில் நடைபெற்ற அரசியல் ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். இக்கூட்ட இறுதியில் வெளியிடப்பட்ட அரகியல் பிரகடனத்தின் சுருக்கத்தை இங்கு தருகிறோம்.

ஆக்கிரமிப்பு சக்திகள் மேலும் முனைப்பாக்கப்பட்டதன் விளைவாக, உலக நிகழ்ச்சிகள் மேன் மேலும் கூடுதலான அபாயத் தன்மையை அடைந்து கொண்டிருக்கின்றன என்று அவை கவலையுடன் இப்போது சுட்டிக் காட்டுகின்றன;

வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுக்கிடையேயுள்ள உறவுகளுக்கு ஒரேயொரு விவேகமான அடிப்படையாகத் திகழும் சமாதான சகவாழ்வுக்கு உலை வைக்க விரும்பும் வட்டாரங்கள் மேன்மேலும் கூடுதல் பிடிவாதமாய் தம்முடைய போக்கை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. 1970-ம் ஆண்டுகளில், உலக விவகாரங்களைப் பொதுவாக அபிவிருத்தி செய்வதன் மீது செல்வாக்குச் செலுத்தத் தொடங்கிய சர்வதேச உறவுகளை மேம்படுத்துவதில் காணப்பட்ட நிதர்சனமான முன்னேற்றம், இப்போது குந்தகப்படுத்தப்பட்டுள்ளது. நெருக்கடி நிலைத் தளர்வுப் போக்கு மக்களுக்கு ஆக்கபூர்வமாள பலன்களை நல்கியுள்ளது; இந்தப் போக்குத் தீங்கிழைக்க எவ்வளவோ செய்யப்பட்டு வருகிறது. ஒத்துழைப்புக்கு பதிலாக முறைப்புநிலை உருவாக்கப்படுகிறது; அரசுகளுக்கிடையே உள்ள உறவுகளின் சமாதான பூர்வமான அடிப்படைகளை சீர்குலைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன;



அரசியல் தொடர்புகளின் அபிவிருத்தியும், அரசுகளுக்கிடையே பரஸ்பரம் அனுகூலமுள்ள பொருளாதார கலாசார உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியமும் பிரச்சினைக்குரியவையாய்க் கருதப்படுகின்றன:

அணு ஆயுதங்கள் மற்றும் சம்பிரதாய ஆயுதங்களைக் கொண்ட சகலவிதமான கொலைக் கருவிகளையும், அனேகமாய் உலகின் எல்லாப் பகுதிகளிலும் சகலவிதமான இராணுவ நடவடிக்கைகளையும் தழுவிய வகையில், குணும்ச ரீதியில் புதிய, மேலும் படு அபாயகரமான கட்டத்தை ஆயுதப் போட்டியானது அடைந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு, ஒட்டுமொத்தமாய் நிலைமை பூராவும் மேன்மேலும் கூடுதலாய் சிக்கலாகிக் கொண்டிருக்கிறது: சர்வதேச நெருக்கடி அதிகரித்துக் கொண்டிருக்கிறது; யுத்த அபாயம், முக்கியமாக அணு யுத்த அபாயம் வளர்ந்து கொண்டிருக்கிறது.

நிகழ்ச்சிகளின் இந்த அபாயகரமான வளர்ச்சிக்கு முற்றிலும் எதிராகச் செயலாற்ற சகல மக்களினங்களும், சகல முற்போக்கு சமாதானம் விரும்பும் சக்திகளும் மேன்மேலும் கூடுதல் விடாமுயற்சியுடன் உறுதி பூண்டுள்ளன; பலத்தின் அடிப்படையிலும் முறைப்பு நிலையின் அடிப்படையிலும் வகுக்கப்பட்ட கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தல், சமாதானத்தைப் பேணிக் காத்தல், சர்வதேச பந்தோபஸ்தை பலப்படுத்துதல், தேசிய சுதந்திரத்தையும் அரசுரிமையையும் மதித்து நடக்கும் கோட்பாடுகளை அரசுகளுக்கிடையேயுள்ள உறவுகளில் ஊர்ஜிதம் செய்தல், எல்லைகளின் மீறவொண்ணாத் தன்மை, உள்விவகாரங்களில் தலையிடாமை, பலப் பிரயோகம் அல்லது பலப்பிரயோக அச்சுறுத்தலைக் கைவிடுதல், சமத்துவம், தம்முடைய தலைவிதியைத் தாயே நிர்ணயித்துக்கொள்ள மக்களினங்கள் பெற்றுள்ள உரிமை முதலிய கோட்பாடுகளையும் மேலும் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட இதர கோட்பாடுகளையும் அரசுகளுக்கிடையேயிருக்கும் உறவுகளில் ஊர்ஜிதம் செய்தல் ஆகியவற்றுக்காகவும் அவை செயலாற்ற உறுதி பூண்டுள்ளன.

எனவே, உலக நிலைமை எவ்வளவு சிக்கலாக இருந்தபோதிலும் கூட, சர்வதேச உறவுகளின் அபாயகரமான கட்டத்தை வென்று சமாளிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருந்து வருகின்றன என்று இந்த மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் நாடுகள் உறுதியாக நம்புகின்றன: நிகழ்ச்சிகளின் இன்றைய போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டும், தடுத்து நிறுத்த முடியும்; மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ற விதத்தில் அதைத் திருப்பிவிடமுடியும்;

அதனால்தான், சமாதானத்தைப் பேணிக் காப்பதை தம்முடைய சமூக அமைப்பினுடைய இயல்பின் உள்ளார்ந்த பண்பாகக் கொண்டிருக்கும் சோஷலிச நாடுகள் தம்முடைய சர்வதேசச் செல்வாக்கு பூராவையும், தம்முடைய அரசியல் பொருளாதார உள்ளாற்றல்கள் அனைத்தையும் சமாதானத்திற்கு ஆதரவாக ஒருமுகப்படுத்தியுள்ளன.

கூட்டுச்சேரா இயக்கமானது, சர்வதேச நிலைமையை மேம்படுத்துவதற்குத் தொண்டாற்றக்கூடிய முக்கியமான ஓர் அம்சமாகும். வேறு பல நாடுகளும்கூட, சர்வதேசச் சூழல் மோசமடைவதை எதிர்க்கின்றன.

மேற்கிலும், கிழக்கிலும், வடக்கிலும், தெற்கிலும் உள்ள வெவ்வேறு சித்தாந்தங்களைக் கடைப்பிடித்து வரக்கூடிய அரசியல் கட்சிகளும், ஸ்தாபனங்களும் ஆயுதப் போட்டிக்கு எதிராகவும், ஆயுதமேந்திய மோதல்கள் தூண்டி விடப்படுவதற்கு எதிராகவும் தம்முடைய குரலை எழுப்பி வருகின்றன. எல்லாக் கண்டங்களையும் சேர்ந்த லட்சோப லட்சக் கணக்கான சாதாரண மக்கள், தம்முடைய சமாதான விருப்பத்தை வெளிப்படுத்துவதற்காக பிரம்மாண்டமான யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

சமாதான சக்திகள் யுத்த சக்திகளைவிட வலுவானவை: அவற்றினுடைய ஒருங்கிணைவின் மீதும், அவற்றினுடைய செயல்களின் காரிய நோக்கின் மீதும்தான் எல்லாமே ஆதாரப்பட்டுள்ளன.

அரசியல் ஆலோசனைக் கமிட்டியின் இந்தக் கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் அரசுகள் சர்வதேச நிலைமையைப் பற்றிய ஆய்வை ஆதாரமாய்க் கொண்டு, அணு ஆயுதப் பேரழிவுக்கு மாற்றாக ஒரு பாதையைக் காட்டுகின்றன; உலகில் நாகரிகத்தையும் ஜீவராசிகளையும் பேணிக்காப்பதற்கு பரந்த அளவிலான சர்வதேச ஒத்துழைப்பு அத்தியாவசியம் என்று அறைகூவி அழைக்கின்றன.

ஆயுதப் போட்டியைத் தடுத்து நிறுத்தல், படைக்குறைப்பு, குறிப்பாக அணு ஆயுதப் படைக்குறைப்பை அமல் நடத்துதல் ஆகிய கடமைதான் யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான போராட்டத்தின் கேந்திர மையமாகும்.

அண்மைக் காலத்தில் அங்கீகரிக்கப்பட்டதும், ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு வருவதுமான அணு ஆயுதங்களை மேலும் மேம்படுத்தி அவற்றை உற்பத்தி செய்வதற்

பல்துறைப் பயிற்சி நிலையம்



கான அமைப்புகளும் சாதனங்களும் உட்பட நவநவீன விஞ்ஞான சாதனைகளையும் கண்டுபிடிப்புகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆயுதங்களை அபிவிருத்தி செய்தல் முதலியன ஐரோப்பாவில் இருப்பதையும் சேர்த்தும்ஒட்டு மொத்தமாய் அமெரிக்க இராணுவ படைக்கலங்களின் அழிவு சக்தியைப் பன்மடங்கு பெருக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இராணுவ மேலாண்மை நிலையை அடைவதற்காக அமெரிக்காவும் அதனுடைய சில கூட்டாளிகளும் கடைப்பிடித்துக் கொண்டிருக்கும் இந்த ஆயுத உற்பத்திப் பெருக்குக் கொள்கையானது, சர்வதேச ஸ்திர நிலையைச் சீர்குலைப்பதற்கே வழி கோலுகின்றது.

ஆயுதங்களை உற்பத்தி செய்து குவிப்பதற்காக அவை தீட்டியிருக்கும் புதிய செயல் திட்டங்களை, ''முதல் அணு ஆயுதத் தடுப்புத் தாக்குதல்'', ''வரையறைக்கப்பட்ட அணு ஆயுத யுத்தம்,'' ''நீடித்து நடைபெறும் அணு ஆயுத மோதல்'' மற்றும் இது போன்ற கேந்திர ஆயுதக் கருத்துக்கள் மற்றும் கோட்பாடுகளை தீவிரமாகக் கடைப்பிடிப்பதிலிருந்து தனியே பிரிக்க முடியாது. சமாதானத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடிய, ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட இந்தக் கோட்பாடுகள் அனைத்தும், அணு ஆயுதங்களை முதலில் உபயோகப்படுத்துவதன் மூலம் அணு ஆயுத யுத்தத்தில் வெற்றி பெறுவது சாத்தியம் என்ற ஊகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

அணு ஆயுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டு வெற்றி பெற்று விடலாம் என்று நம்புவது வெறும் முட்டாள்தனமானது என்று அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் நாடுகள் மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்துகின்றன. அணு ஆயுத யுத்தம் தொடங்கி விட்டால், அதில் வெற்றியாளர்களே இருக்கமுடியாது. ஒட்டு மொத்தமாய் மக்களினங்களின் துவம்சத்துக்கும், பிரம்மாண்டமான சேதங்களுக்கும், நாகரிகமும் உலகம் பூராவிலும் ஜீவராசிகளும் பூண்டோடு அழிந்து போவதற்குமே இது நிச்சயம் வழி கோலும்.

இராணுவக் கொள்கை, தவிர்க்க முடியாதபடி வேறு பல அபாயகரமான பின் விளைவுகளையும் உண்டாக்குகிறது.

முதலாவதாக, மேன் மேலும் புதிய வகை அணு ஆயுத அமைப்புகளையும் இதர சர்வ நாச சாதனங்களையும் அபிவிருத்தி செய்து பரவலாக்கி வைப்பதானது பதற்ற நிலையைத் தீவிரப்படுத்தும்; நாடுகளுக்கிடையேயுள்ள உறவுகளை சிக்கலாக்கும்.

இரண்டாவதாக, ஆயுதப் போட்டியை மேலும் முடுக்கி விடுவதானது, மேலும் மேலும் கீழ் மட்டங்களில் இராணுவ—கேந்திர முக்கியத்துவ சமநிலையைப் பராமரித்

தல் என்ற நோக்கத்திற்கு—இராணுவப் போட்டியை எதிர்த்து வரும் வார்சா ஒப்பந்த உறுப்பினர் நாடுகளின் இந்த குறிக்கோளுக்கு—முரணாக விளங்குகிறது. மேலே குறிப்பிடப்பட்ட ஆயுதங்களை உற்பத்தி செய்து குவிக்கும் செயல் திட்டங்களை அமல் நடத்துவதானது, இராணுவ முறைப்பு நிலை மேலும் உயர்ந்த மட்டங்களை அடைவதற்கு வழிகோலும். சமாதானத்தின் ஸ்திரத் தன்மை மேலும் குறையும்; அது மேலும் வலுவிழந்து விடும்.

மூன்றாவதாக, ஆயுதப் போட்டி மேலும் ஒரு சுற்று நடை பெற்றால், அது அணு ஆயுதங்களையும் இதர சர்வநாச ஆயுத சாதனங்களையும் கூடுதல் நுட்பத் தன்மை கொண்டவைகளாய் ஆக்கி விடும். அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் குறைப்பதற்கும் சர்வதேச உடன்பாடுகளை வகுப்பதிலுள்ள கஷ்டங்கள் இவ்வாறு மேலும் கணிசமான அளவுக்கு அதிகரித்து வரும்.

ஆயுதப் போட்டியைத் தடுத்து நிறுத்துவதற்கும், படைக்குறைப்பு செய்வதற்கும் இன்னும் சாத்தியக் கூறு இருக்கும்பொழுதே, எத்தகைய தாமதமுமின்றி செயலில் இறங்கவேண்டியது அத்தியாவசியம் என்று இக்கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் நாடுகள் நம்புவதற்கு இதுவே காரணமாகும். தத்தம் நாட்டு மக்களின், பொதுவாக மனித குலத்தின் வருங்காலத்தில் கிஞ்சிற்றேனும் அக்கறை கொண்டிருக்கும் நாடுகள், யுத்தத்தை நோக்கி சறுக்கிச் செல்லும் போக்கைத் தடுத்து நிறுத்த எதார்த்த ரீதியில் முனைப்புடன் செயலாற்ற முற்படும் என்று இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் நாடுகள் நம்புகின்றன.

அணு ஆயுதங்களை முதலில் பயன்படுத்துவதில்லை என்று சோவியத் யூனியன் ஒருதரப்பாகவே முடிவெடுத்து அறிவித்த பின்னர், இத்தகைய முடிவை இன்னும் எடுக்காதிருக்கும் ஏனைய அணு ஆயுத நாடுகளும் இதே போன்ற முடிவெடுக்குமென்று இக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள நாடுகள் எதிர்பார்க்கின்றன.

இன்றைய சிக்கலான சர்வதேச நிலைமையிலேயே வரையறை செய்து குறைக்கும் பிரசினையில் ஏற்பட்டிக்கும் முட்டுக்கட்டை நிலைக்குப் பரிகாரம் காணவேண்டியது குறிப்பாக அத்தியாவசியமாகும். இது சம்பந்தமகாக, தற்சமயம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சு வார்த்தைகளை உறுதியுடன் பயனுள்ள முறையில் நடத்தவேண்டுமென்றும், ஆயுதப் போட்டிக்கு முடிவு காண்பதற்காக பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி நடைபெற்று முடங்கிப் போயிருக்கும் பேச்சு வார்த்தைகளை மீண்டும் தொடங்க வேண்டுமென்றும், ஆயுதங்களை குறிப்பாக அணு ஆயுதங்களை குறைப்பது பற்றியும் அவற்றை ஒழித்து விடுவது



பற்றியும் உடன்பாடுகள் காண்பதற்காக விடாமுயற்சியுடனும் பொறுமையாகவும் பணியாற்ற வேண்டுமென்றும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் நாடுகள் அறைகூவல் விடுக்கின்றன. ஆயுதப் போட்டிக்கு முடிவு காணவும், படைக்குறைப்பைப் பேணி வளர்க்கவும் சோவியத் யூனியன் முன்வைத்த பிரேரணைகளை இந்த நாடுகள் ஆதரித்து வரவேற்கின்றன.

கேந்திர ஆயுதங்களை வரையறை செய்வது பற்றியும் குறைப்பது பற்றியும் சோவியத்—அமெரிக்கப் பேச்சு வார்த்தைகளில் கிடைக்கப் பெற்ற வெற்றிச் சாதனைகளுக்கு இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் நாடுகள் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றன.

தம்முடைய ஆயுதப் படைகளை, ஆயுத தளவாடங்களை குறிப்பாக அணு ஆயுதங்களை பெருக்கி அதிகரிப்பதை நிறுத்தி விடுவது பற்றி, பிரதான இராணுவ வல்லரசுகளுக்கிடையே ஓர் உடன்பாடு ஏற்படுவதானது, ஆயுதப் போட்டிக்கு முடிவு காண்பதை நோக்கி எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாகத் திகழ முடியும் என்று இக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள நாடுகள் நம்புகின்றன.

மேலும், அணு ஆயுதக் குறைப்பை கட்டம் கட்டமாகச் செயல்படுத்தும் ஒரு வேலைத் திட்டத்தை வகுக்க வேண்டுமென்றும், புதிய அணு ஆயுத அமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கும் உற்பத்தி செய்வதற்கும், வெவ்வேறு வகையான அணு ஆயுதங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான அணுப்பிளப்பு உலோகங்களின் உற்பத்திக்கும், இந்த அணு ஆயுதங்களை எடுத்துச் செல்ல வல்ல ராக்கெட்டுகளின் உற்பததிக்கும் முடிவு கட்டுவதற்கான உடன்பாடுகளை இந்த வேலைத் திட்டத்தின் கட்டுக் கோப்புக்குள் வகுக்கவேண்டுமென்றும் இந்தக் கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் நாடுகள் உறுதியுடன் பரிந்துரை செய்கின்றன. அணு ஆயுதங்களை ஒழிப்பதை நோக்கி முன்னேறிச் செல்வதற்குத் தகுந்த நிலைமைகளை இவையனைத்தும் சிருஷ்டி செய்யும்.

பல ஸ்தூலமான பிரச்சினைகளைப் பற்றி உடன்பாடுகள் செய்து கொள்வதை துரிதப்படுத்தவேண்டியது அவசியமென்றும் அவை நம்புகின்றன. கீழ்க்காணும் குறிக்கோள்களை அடையும் பொருட்டு, ஜெனீவா படைக் குறைப்புக் கமிட்டியின் கட்டுக்கோப்புக்குள் இருப்பவை உள்பட, பேச்சு வார்த்தைகளுக்கு மேலும் புதிய ஆக்கம் அளிக்க வேண்டுமென்று எல்லா நாடுகளையும் அறைகூவி அழைக்கின்றன.

அணு ஆயுத சோதனைகளுக்கு பரிபூரணமான, முழுதளாவிய தடை விதிப்பது பற்றி மிகக் குறுகிய காலத்திற்குள் ஓர் ஒப்பந்தத்தை வகுத்தல்;

இரசாயன ஆயுதங்களின் தடைபற்றியும் அவற்றை அழித்து விடுவது பற்றியும் ஒரு சர்வதேச உடன்பாட்டைத் தீட்டும் பணியைத் துரிதப்படுத்தல்;

நியூட்ரான் குண்டுகளைத் தடை செய்வது பற்றிய உடன்பாட்டைத் தீட்டும் பணியை மேற்கொள்ளுதல்;

அண்ட வெளியில் எந்தவிதமான ஆயுதங்களையும் நிலைப்படுத்தி வைப்பதைத் தடைசெய்வது பற்றி எவ்விதத் தாமதமுமின்றி உடனே பேச்சு வார்த்தைகளைத் தொடங்குதல்;

கதிரியக்க ஆயுதங்களைத் தடை செய்வது பற்றி ஒரு சர்வதேச உடன்பாட்டைக் கூடுமான விரைவில் செய்து கொள்ளுதல்;

அணு ஆயுதங்களைப் பெற்றிராத நாடுகளுடைய பந்தோபஸ்து உத்தரவாதங்களைப் பலப்படுத்தும் பிரச்சினைக்கு துரிதமாகத் தீர்வுகாணுதல்.

இந்தக் கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் நாடுகள், அணு ஆயுதப் பரவல் தடைக்கு தொடர்ந்து அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன; அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருக்கும் நாடுகளின் எண்ணிக்கை சமீப காலத்தில் அதிகரித்திருப்பதை வரவேற்கின்றன; இந்த ஒப்பந்தத்தில் இன்னும் கையெழுத்திடாதிருக்கும் நாடுகள் விரையில் கையெழுத்திட முன்வரும் என்று நம்பிக்கை தெரிவிக்கின்றன. தற்சமயம் அணு ஆயுதங்கள் பரவலாக்கி வைக்கப்படாதிருக்கும் தேசங்களில் அவற்றைப் புதிதாக அங்கே பரவலாக்கி வைக்காமலிருப்பது பற்றியும், ஏற்கெனவே இந்த ஆயுதங்கள் நிலைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் தேசங்களில் இவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் இருப்பது பற்றியும் ஒரு சர்வதேச உடன்பாடு செய்து கொள்வதை இந்த நாடுகள் ஆதரிக்கின்றன.

அயல் நாடுகளிலுள்ள இராணுவத் தளங்களை அகற்றுவதற்காகவும், அன்னியப் பிரதேசங்களிலிருந்து துருப்புக்களை வாபஸ் வாங்குவதற்காகவும் சர்வதேச அளவில் மீண்டும் புதிய முயற்சிகள் தொடங்கப்படுவதற்குத் தம்முடைய நிலையான ஆதரவை இக்கூட்டத்தில் கலந்து கொண்ட நாடுகள் மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றன.

இராணுவச் செலவைக் குறைப்பதன் விளைவாகக் கிடைக்கும் செல்வவளங்களை, பொருளாதார சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு, குறிப்பாக, இந்தத் துறையில் வளர்முக நாடுகளுக்கு உதவி செய்வதற்குப் பயன்படுத்த முடியும்.



இராணுவச் செலவுகளை குறைப்பது பற்றியும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் நாடுகள் கூட்டாகவும் அல்லது தனித்தனியாகவும் ஏற்கெனவே அறிவித்திருக்கும் பிரேரணைகள் அமலில் இருக்கின்றன என்பதை மீண்டும் சுட்டிக் காட்டுகின்றன. வார்சா ஒப்பந்த நிறுவனத்தில் கலந்து கொண்டிருக்கும் நாடுகளுக்கும் நேட்டோ உறுப்பினர் நாடுகளுக்குமிடையே நேரடிப் பேச்சு வார்த்தைகள் எவ்விதத் தாமதமுமின்றி உடனடியாக நடைபெறவேண்டுமென்று அவை பிரேரிக்கின்றன.

இன்றுள்ள நிலைமையை மனத்திற்கொண்டு, இந்த அரசியல் பிரகடனத்தை நிறைவேற்றியிருக்கும் நாடுகளின் உயர்மட்டப் பிரதிநிதிகள் இவ்வாறு அறிவிக்கின்றனர். சமாதானத்தைப் பேணிக்காத்து, ஆயுதப் போட்டிக்கு முடிவு கட்டுவதைவிட பல்வேறு தேச மக்களுக்கும் இன்று கூடுதல் முக்கியமான கடமை வேறெதுவும் இல்லை இதை நிறைவேற்ற வேண்டியது எல்லா அரசாங்கங்களின், தத்தம் நாடுகளின் கொள்கைகளை வகுக்கக் கூடிய எல்லா அரசியல் தலைவர்களின் கடமையாகும்.

ஐரோப்பாவில் பந்தோபஸ்தை பலப்படுத்துவதானது யுத்த அபாயத்தை அகற்றுவதற்கான கடமையின், உலக சமாதானத்தை பதப்படுத்துவதற்கான கடமையின் முக்கிய கூறுகத் திகழ்கிறது. ஏனெனில், அணு ஆயுதங்களும் சம்பிரதாய ஆயுதங்களும்—இரண்டு வகைகளுமே—மிகப் பெரிய அளவில் ஐரோப்பாக் கண்டத்தில் குவித்து வைக்கப்பட்டிருப்பதும், இரண்டு இராணுவக் கூட்டணிகளைச் சேர்ந்த ஆயுதப் படைகளும் இங்கே நேருக்கு நேர் அணிவகுத்து நிற்பதுவுமே இதற்கான முழு முதல் காரணமாகும்.

ஐரோப்பாவில் அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் ஆக்க பூர்வமான உணர்வுடன் நடத்தப்படவேண்டியதும், அந்தப் பேச்சு வார்த்தைகளில், கூடுமான விரைவில், ஸ்தூலமான உடன்பாடுகளைச் செய்து கொள்ள சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டியதும் பரம முக்கியத்துவம் வாய்ந்தது என்று இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் நாடுகள் நம்புகின்றன. இந்தப் பேச்சு வார்த்தைகள் வெற்றியடைய வேண்டுமென்றால், மேலும் சிக்கலை உண்டாக்கக் கூடிய எத்தகைய நடவடிக்கைகளையும் எடுக்காமலிருப்பதும் அவசியமாகும். அது மட்டுமன்றி, இந்தப் பேச்சு வார்த்தைகளின் முன்னேற்றத்திற்குச் சாதகமான சூழ்நிலையை சிருஷ்டிக்க உதவக் கூடிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசியமாகும்.

ஐரோப்பாவில் உள்ள நிலைமையானது பதற்றத் தணிவு, சமாதானம் மற்றும் படைக்குறைப்புக் கொள்கையை முரணின்றிப் பின்பற்றுவதற்கு முன்னெப்போ

தைக் காட்டிலும் அதிகமாக நாடுகளின் முயற்சிகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்று கோருகிறது. அதனால் தான், பந்தோபஸ்து மற்றும் ஒத்துழைப்புக்கான ஐரோப்பிய மாநாட்டினால் துவக்கி வைக்கப்பட்ட பன்முக நிகழ்வுப் போக்கைத் தொடர்ந்து நடத்துவதும், விஸ்தரிப்பதும் மிகுந்த முக்கியத்துவம் பெற்று வருகிறது.

இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு, கூட்டத்தில் பிரதிநிதித்துவம் வகித்த நாடுகள், ஐரோப்பிய மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்ட நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய மாட்ரிட் கூட்டம், பொருள் பொதிந்த மற்றும் நன்கு சமனப்பட்ட இறுதி தஸ்தாவேஜை ஏற்பதுடன் பயனுள்ள முறையில் நிறைவாக்க வேண்டும் என்று கோருகின்றன.

கூட்டத்தில் பிரதிநிதித்துவம் வகித்த நாடுகள் அனைத்து ஐரோப்பிய நாடுகளுடனும் பரஸ்பரம் அனுகூலமான தொடர்புகளை வளர்த்துக் கொள்வதற்குத் தயாராயிருக்கின்றன. இதற்கேற்ப, அவை பின்வருமாறு கூறுகின்றன:

அரசியல் உரையாடல் மற்றும் கலந்தாலோசனைகள் எல்லா மட்டங்களிலும் நீடித்து நடைபெறவேண்டும், விஸ்தரிக்கப்படவேண்டும், சாத்தியமான அளவு மிகவும் பரந்த அளவில் அரசியல் பரிமாற்றம் நடைபெறவேண்டும். நாடாளுமன்றங்கள், அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், இளைஞர், மாதர் மற்றும் பிற ஸ்தாபனங்கள் இடையில் ஐரோப்பாவில் சமாதானத்தையும் பந்தோபஸ்தையும் வளர்ப்பதற்காக இரு தரப்பு மற்றும் பல தரப்பு அடிப்படையில் தொடர்புகள் வளர்க்கப்பட வேண்டும் என்பதே இங்கும் பொருட்படுத்தப்படுகிறது;

வர்த்தகம், தொழில் துறை, விவசாயம், விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பவியல் துறைகளில் எத்தகைய பாகுபாடும் இன்றி வர்த்தக ரீதியான ஒத்துழைப்பும், பொருளாதார உறவுகளில் நம்பிக்கையைக் கட்டியமைக்கும் நடவடிக்கைகளும் எல்லா வழிகளிலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். சமத்துவ மற்றும் பரஸ்பர அனுகூலத்தின் அடிப்படையிலான ஒத்துழைப்புக்கு மெய்யாகவே எல்லையற்ற வாய்ப்புக்கள் இங்கு தோன்றி வருகின்றன;

மாறுபட்ட சமூக அமைப்புகளை உடைய நாடுகள் பல பத்தாண்டுகளாக சகவாழ்வு வாழ்ந்து வரும் ஐரோப்பாவில், சமாதான பூர்வமான சகவாழ்வுக் கொள்கை மட்டுமே நீடித்து நிலைத்திருக்கக் கூடியதாக இருக்கமுடியும்;



சமாதானமான முறையில் நியாயமாகத் தீர்வுகாணப்பட முடியாத உலகந்தழுவிய பிரச்சினைகளோ, அல்லது பிராந்தியப் பிரச்சினைகளோ எதுவுமில்லை. ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும், வெளியார் தலையீடு இன்றி, தமது உள்நாட்டு விவகாரங்களுக்குத் தீர்வுகாணவும் சமத்துவ அடிப்படையில் சர்வதேச விவகாரங்களில் பங்கெடுத்துக் கொள்வதற்கும் சட்டப்படியான உரிமை உண்டு என்பதை ஒவ்வொருவரும் நடைமுறையில் அங்கீகரிக்கவேண்டும்; நாடுகளின் சுதந்திரத்தையும், பிரதேச ஒருமைப்பாட்டையும், அவற்றின் எல்லைகளது மீறவொண்ணாத் தன்மையையும் மதிக்கவேண்டும், படை பலத்தை உபயோகப்படுத்துவதாக அச்சுறுத்துவதைக் கைவிடவேண்டும் என்ற கோட்பாட்டுக்கு மதிப்பளிப்பது; எந்த வல்லரசும் மேலாதிக்கக் கொள்கையைக் கடைப்பிடிக்கவும், ''நலன்கள் மண்டலங்களை'' அல்லது ''செல்வாக்கு மண்டலங்களை'' ஏற்படுத்துவதற்கும் முயலக்கூடாது என்பதே பிரதான விஷயமாகும்.

பல தகராறுகளுக்கான காரணங்களை அகற்றுவதற்கு, காலனியாதிக்கம், இனவெறி ஆகியவற்றின் மீதமிச்சங்கள் இறுதியாக அகற்றப்படவேண்டும், நவீன—காலனியாதிக்கம், ஒடுக்குமுறை மற்றும் பிறநாட்டு மக்களைச் சுரண்டுதல் என்ற கொள்கை கைவிடப்படுதல் அவசியம் என்பது கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களின் நம்பிக்கையாகும். இது தெற்கு ஆப்பிரிக்காவில் உள்ள அபாயகரமான நிலைமையினால் மிக மிகத் தெளிவாக ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

நெருக்கடி நிலையை அகற்றுவது, மற்றும் அவை ஏற்படாமல் தடுப்பதை நோக்கிய ஒரு பெரும் பங்குப் பணி கூட்டுச்சேரா இயக்கத்தினால் ஆற்றப்பட்டு வருகிறது; இந்த லட்சியங்களை நோக்கிய நடைமுறை நடவடிக்கைகள் எல்லா நரடுகளாலும் அங்கீகரிக்கப்படவும், ஆதரவு அளிக்கப்படவும் தகுதி வாய்ந்தவையாகும். ஆப்பிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம், அரபு லீக் போன்ற நாடுகளின் இத்தகைய பிராந்தியக் கழகங்களும், இந்த அம்சத்தில் ஓர் ஆக்க பூர்வமான பங்காற்றும்படி அறை கூவியழைக்கப்படுகின்றன.

சிறந்த அண்டை நாட்டுறவுகளை நிறுவுவதையும், ஊக்குவிப்பதையும், சமாதான மற்றும் ஒத்துழைப்பு மண்டலங்களை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்ட ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவிவிலுள்ள அரசுகளின் முன்முயற்சிகள் இந்தப் பிராந்தியங்களின் பல்வேறு பாகங்களில் பதற்றத்தை அகற்றுவதற்கு ஒரு சமாதான மண்டலமாக மாற்றுவதற்கான பிரேரணை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மத்திய கிழக்கிலுள்ள மிகவும் நீண்டு நீடித்த மற்றும் அபாயகரமான மோதலுக்கு தீர்வுகாணும் பணிக்கு கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விசேஷ முக்கியத்துவம் அளிக்கின்றனர். லெபனன் மீது இஸ்ரேல் படையெடுத்ததையும், பாலஸ்தீனிய மற்றும் லெபனன் மக்களுக்கு எதிரான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பையும், மேற்கு பெய்ருத்தின் சாதாரண மக்களைக் காட்டுமிராண்டித்தனமாகப் படுகொலை புரிந்ததையும் அவர்கள் வன்மையாகக் கண்டனம் செய்கின்றனர். இங்கு, தனது ஆக்கிரமிப்புச் செயல்களைப் புரியுமாறு, இஸ்ரேலுக்கு ஊக்கமூட்டியவர்கள், அதற்கு வெளியிலிருந்து உதவியையும் ஆதரவையும் அளித்து வருகின்றனர்.

லெபனனிலிருந்து இஸ்ரேலியத் துருப்புகள் உடனடியாகவும் பூரணமாகவும் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும், அந்த நாட்டின் சுதந்திரம், அரசுரிமை ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு உத்தரவாதம் செய்யப்பட வேண்டுமென்றும் கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டோர் கோரினர்.

ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையிலான போர் நிறுத்தப்பட வேண்டுமென்றும், அவற்றுக்கு இடையிலான தகராறுக்குரிய பிரச்சினைகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும், கூட்டத்தில் பிரதிநிதித்துவம் வகித்த நாடுகள் கோரின; மேலும், ஆப்பிரிக்கக் கொம்புப் பகுதியிலுள்ள நாடுகளிடையிலான தகராறும், ஆப்பிரிக்காவிலுள்ள இதர தகராறுகளும் சுதந்திரத்திற்கும், பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் பரஸ்பரம் மதிப்பு அளிக்கும் அடிப்படையில் தீர்த்துக்கொள்ளப்படவேண்டும்; மத்திய அமெரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் உள்ள தகராறு நிலைமைகளுக்கு அரசியல் வழிமுறைகளில் தீர்வுகாணப்படவேண்டும்.

இந்தப் பின்னணியில், கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டோர், சர்வதேசப் பொருளாதார உறவுகளை ஒரு நியாயமான மற்றும் ஜனநாயக அடிப்படையில் மறு கட்டமைப்புச் செய்வதற்கும், ஒரு புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பை நிறுவுவதற்கும், ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, மற்றும் ஓசியானியாவிலுள்ள நாடுகளுக்கு அவற்றின் இயற்கை வளங்களின் பூரண அரசுரிமையை உத்தரவாதம் செய்வதற்கும் ஆதரவு அளிக்கும் தமது நிலையை மீண்டும் ஊர்ஜிதம் செய்தனர்.

கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட நாடுகள், சமாதானத்தையும், சர்வதேச பந்தோபஸ்தையும் வளர்ப்பதற்கும், அவசர உலகப் பிரச்சினைகளின் தீர்வுக்குப் பங்குப் பணியாற்றுவதற்கும் நாடுகளின் முயற்சிகளை ஒன்றிணைப்பதற்கான ஒரு முக்கிய கருவி என்ற வகையில் சர்வதேச விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் பாத்திரம் அதிகரிக்கவேண்டும் என்று கோருகின்றன.

## மார்க்ஸியம்-லெனினியமும் எமது காலமும்

வஸிலி அகஃபனேவ்
விஞ்ஞான கலாநிதி

பல்துறைப் பயிற்சி நிலையம்

# முதலாளித்துவ மற்ற வளர்ச்சிப் பாதை பற்றி மார்க்ஸிய-லெனினியம்

ஏகாதிபத்தியத்தின் சித்தாந்திகள் விஞ்ஞான சோஷலிஸ தத்துவத்தின் மீதும் நடைமுறை மீதும், குறிப்பாக கலோனியல் நுகத்தடியைத் தூக்கியெறிந்துள்ள நாடுகள் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையை மேற்கொள்ள முடியும் என்ற தத்துவத்தின் மீதும் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகிறார்கள். விஞ்ஞான சோஷலிஸம் ஐரோப்பாவிலேயே ஜெனித்தது என்றும், மார்க்ஸ் தனது விஞ்ஞான முறையை முதலாளித்துவ அமைப்பை ஆராயவே உபயோகித்தார் என்றும் வாதாடும் இவர்கள் மார்க்ஸிய தத்துவம் வளர்முக நாடுகளுக்கு, மூன்றாம் உலகப் புரட்சி என்னும் புதிய வரலாற்றுத் தோற்றுப்பாட்டை மதிப்பீடு செய்ய பொருத்தமற்றது என வாதிக்கிறார்கள். ஆனால் உண்மைகள் இந்த வாதங்களை நிராகரிக்கின்றன. இவற்றிற்கும் ஏனைய பிரச்னைகளுக்குமான சரியான விளக்கத்தை மார்க்ஸிய-லெனினிய தத்துவம் மட்டுமே தருகிறது என்பதை நிகழ்வுப் போக்குகள் ஊர்ஜிதம் செய்துள்ளன. இந் தத்துவம் ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க நாடுகளிலுள்ள முற்போக்காளர்கள், ஜனநாயகவாதிகள் மீது கூடுதலான செல்வாக்கை வகித்துவருகிறது.

அங்கோலா, மொசாம்பிக், அல்ஜீரியா, சிரியா, எத்தியோப்பியா, மற்றும் பல வளர்முக நாடுகள் கலோனியலிஸ்ட்டுகளையும் ஏகாதிபத்திய வாதிகளையும் எதிர்த்த கடும் போராட்டத்திலேயே தமது சுதந்திரத்தையும் சுயாதினத்தையும் வென்றெடுத்தன. இவை சுரண்டலின் அனைத்து வடிவங்களையும் எதிர்த்த போராட்டப் பாதையை மேற்கொண்டுள்ளன, சமூக, பொருளாதார மாற்றங்களை

வெற்றிகரமாக செயற்படுத்தி வருகின்றன. இன்று புதிதாக விடுதலையடைந்த நாடுகளில் 15 கோடி மக்கள் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையை மேற்கொண்டுள்ளனர். பின்தங்கிய நாடுகள் சோஷலிஸத்திற்கு மாறிச் செல்ல முடியும் என்ற மார்க்ஸிஸ-லெனினிய தத்துவத்தின் பிசகின்மையை இவர்கள் தமது புரட்சிகர போராட்டத்தின் மூலம் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

## மார்க்ஸிய நியமம்

விஞ்ஞான சோஷலிஸத்தை நோக்கிச் செல்லும் வழியில் பல கட்டங்களை (புராதான சமுதாயம், அடிமைச் சமுதாயம், நிலப்பிரபுத்துவ சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம்) தாண்டிச் செல்கிறது. இந்த தத்துவத்தை விரித்து விளக்கிய மார்க்சும் ஏங்கல்சும் வரலாறு முழுவதிலுமே சில நாடுகள் ஏனையவற்றிலும் பார்க்க மிக வேகமாக முன்னேறியுள்ளன எனச் சுட்டிக்காட்டினர். இதற்கு பிரத்தியேகமான உள்நாட்டு, வெளிநாட்டு காரணிகள் ஏதுவாகும் என்றனர். உதாரணத்திற்கு 19 ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் முதலாளித்துவம் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் மேலாதிக்கம் செலுத்தியது. ஆனால் பல நாடுகளிலும் கண்டங்களிலும் முதலாத்துவத்திற்கு முந்திய உறவுகளே நீடித்தன.

இந்த சமதையற்ற வரலாற்று வளர்ச்சியினை ஆதாரமாகவைத்து பின்தங்கிய நாடுகள் முதலாளித்துவத்தைத் தவிர்த்துக் கொண்டு சோஷலிஸத்திற்கு மாறிச் செல்ல முடியும் என்ற முடிவுக்கு விஞ்ஞான சோஷலிஸத்தின்மூலவர்கள் வந்தனர். இதைஒரு 'குறுக்குப்' பாதை என அவர்கள்வர்ணித்தனர். ஆனால் இவ்வாறு தவிர்க்கப்படும் சமுதாய அமைப்பு வளர்ச்சியுற்ற நாடுகளில் காலாவதியானால் மட்டும்தான் இந்தச் சாத்தியப்பாடு இருக்க முடியும். அத்துடன் பின்தங்கிய நாடுகள் ஏற்றுக் கொண்ட புதிய சமுதாய அமைப்பு சமூக வளர்ச்சியில் நிர்ணயமான காரணியாகவும் மாறியிருக்க வேண்டும். ''முதலாளித்துவத்திற்கு முற்பட்ட காலகட்டத்தில் அனைத்து நாடுகளுமே முதலாளித்துவ மற்ற வளர்சிப்பாதையை மேற்கொள்ள முடியும்'' என்று ஏங்கல்ஸ் எழுதினார்.

இத்தகைய வளர்ச்சிக்கான பிரதான முன்தேவை சோஷலிஸப் புரட்சி வெற்றியீட்டிய நாடுகள் பின்தங்கிய நாடுகளுக்கு வழங்கும் உதவியும் ஆதரவுமே என்று மார்க்சும் ஏங்கல்சும் வலியுறுத்தினர். வளர்ச்சியின் ''குறுக்குப் பாதை'' பற்றி அவர்கள்பேசியபோது இதை வலுக்கட்டாயமாகப் புகுத்துவது பற்றி அவர்கள் மனம் கொள்ளவில்லை என்பது வற்புறுத்தப்பட வேண்டும். மாறாக சோஷலிஸத்

---

1. கே. மார்க்ஸ், எஃவ். ஏங்கல்ஸ், நூல்கள், பா. 22 ப. 448.



தின் அனுகூலங்களை உணர்ந்து தம்விருப்பப்படியே அவர்கள் படிப்படியாக சோஷலிஸத்திற்கு மாறிச் செல்வார்கள் என்றே எதிர்பார்த்தார்கள்.

எனினும் சோஷலிஸ நாடுகளின் பொருளாயத தொழில்நுட்ப உதவி மட்டும் முதலாளித்துவமற்ற பாதையை மேற்கொள்ளப் போதுமானதல்ல. பிரதம நாடுகளில் சோஷலிப் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து பின்தங்கிய நாடுகள் முதலாளித்துவமற்ற வளர்ச்சியில் முன்செல்வது உள்நாட்டுக் காரணிகளாலேயே, வர்க்கங்களுக்கிடையிலான உறவு, முன்னணி வர்க்கங்களினதும் அவற்றின் முன்னணிப்படைகளான கட்சிகளினதும் பிரக்ஞை, செயற்பாடு ஆகியவற்றாலுமே பெரிதும் நிர்ணயிக்கப்படும் என்று ஏங்கல்ஸ் குறிப்பிட்டார்.

## லெனினிய கட்டம்

தேசிய, கலோனியல் பிரச்னையை ஏகாதிபத்தியத்தைத் தூக்கியெறிவதுடனும், சோஷலிஸப் புரட்சியுடனும், உலகப் புரட்சிகர இயக்கத்துடனும் இணைத்தமையே லெனினது மாபெரும் சேவையாகும். 1917ல் ரஷ்யாவில் வெற்றியீட்டிய மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் பின்னர், கலோனியலிஸத்திலிருந்து தமது விமோசனத்தை ஈட்ட விழித்தெழுந்துள்ள கிழக்கத்திய மக்கள் சோஷலிஸ ராஜ்யத்தினதும் உலகப் பாட்டாளி வர்க்கத்தினதும் நேச சக்திகளாவர் என்று அவர் கருதினார். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் புதிதாக விடுதலையுற்ற மக்களை சோஷலிஸ நாடுகளின் உதவியையும் ஆதரவையும் நாட நிர்ப்பந்திக்கின்றது. ஏகாதிபத்திய சூழ்ச்சிகளை எதிர்த்த போராட்டத்தில் தேசிய விமோசன இயக்கத்திற்கு ஆதரவளிப்பதில் சோஷலிஸ நாடுகள் அக்கறை கொண்டுள்ளன. இவை அனைத்துமே பொது எதிரியை எதிர்த்த போராட்டத்தில் சர்வதேசிய தொழிலாளி வர்க்கமும் ஆசிய, அபிரிக்க, தென் அமெரிக்க நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்களும் ஒரே ஐக்கிய அணியில் ஒன்றுபட வேண்டும் என்ற தத்துவத்தை லெனின் முன்வைக்க காரணமாக இருந்தன.

ஆரம்பத்தில், இந்த நாடுகளின் பாட்டாளி வர்க்கம் எண்ணிக்கையில் சொற்பமாகவும், அரசியல் ரீதியில் ஸ்தாபன ரீதியாக ஒன்றுதிரளாதும் இருப்பதால் சோஷலிஸ நாடுகளினது பாட்டாளிவர்க்கமே விவசாயிகளினதும் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களினதும் நம்பிக்கையான கூட்டாளியாக இருக்க முடியும் என்று லெனின் சுட்டிக்காட்டினர்.

இந்த நிலைமைகளில் ''சோவியத் குடியரசு விழிப்புற்றுள்ள கிழக்கத்திய மக்களை ஒன்று திரட்டி அவர்களுடன் இணைந்து சர்வதேசிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்தப் போராட வேண்டும்''[2] என்று லெனின் சொன்னர்.

---

2. வி. ஐ. லெனின், திரட்டு நூல்கள். பா 30, ப. 161.

முதலில் தேசிய விமோசனத்தை இலக்காகக் கொண்ட கிழக்கத்திய உழைக்கும் மக்களின் இயக்கம் பின்னர் முதலாளித்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்துத் திரும்புவதுடன், இவற்றின் வீழ்ச்சியில் பெரும் பாத்திரத்தை வகிக்கும் என்று லெனின் கருதினார். போராட்டத்தின் நியதி காலனிகளினதும் அரைகாலனிகளினதும் மக்களை முதலாளித்துவப் பாதையைத் தவிர்க்கவும், அந்நிய-உள்நாட்டு நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் தூக்கியெறியவும் இட்டுச் செல்லும் என்றும் லெனின் நம்பினார்.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் தேசிய விமோசன இயக்கத்தின் ஸ்தூல நிலைமைகளை வரையறுத்த லெனின் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்திற்கு மாறிச் செல்வதன் அகநிலைக் காரணிகளை விரிவாக விளக்கினார். ஏகாதிபத்திய அணியின் உடைவும், சோஷலிஸ நாடுகளின் உதயமும் ஒரு குறிப்பிட்ட பின்தங்கிய நாடு முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பதையை மேற்கொள்ள தன்னியல்பாகவே இட்டுச் சென்று விடாது. சாதகமான சர்வதேசிய சூழலை, குறிப்பிட்ட நாட்டில் பயன்படுத்தக்கூடிய புரட்சிகர சக்திகள் இருந்தால் மட்டும்தான் இந்தப் பாதை எதார்த்தமாக முடியும். முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதை பற்றிய தத்துவத்தை வகுத்தளித்த லெனின் தேசிய விமோசன இயக்கத்தில் வர்க்கங்களினதும், கம்யூனிஸ்ட்-மக்கள் புரட்சிகர கட்சிகளினதும் பாத்திரத்தை சுட்டிக்காட்டினார். பொருளாதார ரீதியில் பின் தங்கிய நாடுகள் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையை மேற்கொள்வதில் தொழிலாளி வர்க்கத்தினதும் விவசாய மக்களினதும் ஒற்றுமை நிர்ணயமான பாத்திரத்தைவகிக்கிறது என வலியுறுத்தினார்.

## முன்னணிப்படையின் பாத்திரம்

தேசிய விமோசனத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்குமான மிக திடவுறுதியான போராளி தொழிலாளி வர்க்கமே என்று லெனின் கருதினார். ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க நாடுகளின் இளம், ஆனால் துரிதமாக வளர்ந்து வரும் தொழிலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கப்பிடிப்புகளை பலவீனப்படுத்துவதிலும், கலோனியல் அமைப்பை ஒழிப்பதிலும், மனிதனை மனிதன் சுரண்டுவதன் அனைத்து வடிவங்களுக்கும் முடிவுகட்டுவதிலும் முக்கியமான பாத்திரத்தினை வகிக்கும் என்றார். தொழிலாளி வர்க்கம் சக்திப்படுவதுடன், தனது சொந்த அரசியல் கட்சிகளையும், தொழிற் சங்கங்களையும் அது அமைப்பதுடன் தேசிய விமோசன இயக்கத்தின் தலைமைத்துவம் தேசிய பூர்ஷ்வாக்களின் கரங்களிலிருந்து தொழிலாளி வர்க்கத்தின் கரங்களுக்குப் படிப்படியாக மாறிச் செல்லும் என்று லெனின் நம்பிக்கை தெரிவித்தார்.

எமது காலத்தில் தேசிய விமோசன இயக்கத்தின் அனுபவம் லெனினின் இந்த விஞ்ஞான பூர்வமான ஆருடங்களை மெய்ப்பித்துள்ளது.

**சோவியத் சமுதாயம் வாழ்வும் பிரச்னைகளும்**

மிகைல் கொர்பசெவ்
(சோ.க.க. அ.கு. உறுப்பினர்,
சோ.க.க.ம.க. செயலாளர்)

# சோவியத் உணவுத் திட்டமும் அதன் சர்வதேச முக்கியத்துவமும்

சோவியத் யூனியனின் உணவுத் திட்டம் உலக உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான ஒரு முக்கியமானதும் உருப்படியானதுமான திட்டமாகும்.

பற்பல கண்டங்களிலுமுள்ள லட்சோப லட்சம் மக்களிடையே ஊட்டமற்ற உணவுகளும், பசியும் கொடிய நோய்களையும் மரணங்களையும் தொடர்ந்து ஏற்படுத்துகின்றன. காலனித்துவ அடக்குமுறையிலிருந்து சமீபத்தில் விடுதலையுற்ற ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமெரிக்க வளர்முக நாடுகளே உலக உணவு நெருக்கடியின் மையமாக விருக்கின்றன.

இந்தத் தரவுகளைப் பார்க்கலாம்: கடந்த 15 ஆண்டுகளில் சோவியத் தானியப் பயிர்கள் வருடத்திற்குச் சராசரியாக 7கோடி 50லட்சம் தொன்களால் அல்லது 57சதவீதத்தால் அதிகரித்துள்ளன, வருடாந்த சராசரியில் மொத்த விவசாய உற்பத்தி மக்கள் அதிகரிப்பைவிட சுமார் 150 சதவீதம் வேகமாகவும், அது பொதுச் சந்தை நாடுகளிலும் அமெரிக்காவிலும் இடம்பெற்றதைவிட 50—100 சதவீதம் வேகமாகவும் அதிகரித்துள்ளது. உலக மக்கட் தொகையில் 6சதவீதத்தைக் கொண்டுள்ள சோவியப் யூனியன் உலக தானிய உற்பத்தியில் 13 சதவீதத்தையும், பால் உற்பத்தியில் 20 சதவீதத்தையும், இறைச்சி உற்பத்தியில் 10 சதவீதத்தையும், முட்டை உற்பத்தியில் 12 சதவீதத்தையும் தந்துள்ளது. எதிர்காலத்திலும் தானிய உற்பத்தியை அதிகரிக்கவும், பயிர்செய்யப்படும் நிலங்களை அதிகரிக்கவும் எம்மாலானதனைத்தையும் செய்யவுள்ளோம்.

1982ல் மெக்ஸிகோவில் நடந்த ஐ.நா. உணவுக் கவுன்சிலின் எட்டாவது தொடர் கூட்ட முடிவு இப்படிக் குறிப்பிடுகிறது. பயிர்கள் மற்றும் உணவுற்பத்தியை குறைப்பது சட்டத்தில் ஒரு குற்றச் செயலாகக் கருதப்படல் வேண்டும்.

எனவே பல வளர்முக நாடுகளின் தூதுக்குழுக்கள் பண்ணை உற்பத்திகளை அதிகரித்து பசியால் வாடும் பகுதி

களுக்கு உதவும்படி எல்லா நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தன. ஆனால் அதற்கு எல்லா நாடுகளும் செவி சாய்த்ததாகத் தெரியவில்லை.

தானியப் பயிர்ச்செய்கைக்குட்பட்ட நிலப்பரப்பை குறைப்பதற்கான திட்டத்தைச் செயற்படுத்த அமெரிக்கா முன்வந்தது. கோதுமை விளை நிலங்களை 20 சதவீதத்தாலும், தானிய நிலங்களை 15 சதவீதத்தாலும் குறைக்கும்படி விவசாயிகள் கேட்கப்பட்டார்கள். ஏற்றுமதி விலைகளை உயர்த்தவும், ஏகபோகங்களின் லாபத்தை அதிகரிக்கவுமே இது செய்யப்பட்டது. எனவே 1970களின் ஆரம்பத்தில் வரட்சி பல நாடுகளைத் தாக்கியபோது இரண்டே (1973-1974) ஆண்டுகளுக்குள் கோதுமையின் விலை 170 சதவீதத்தால் அதிகரித்தது, அரிசி விலை 270 சதவீதத்தாலதிகரித்தது. இவ்வித செயல்களால் மக்கள் திண்டாடினார்கள், உலக உணவு நிலைமை நெருக்கடிக்குள்ளாயிற்று, வளர்முக நாடுகள் உணவைப் பெறுகின்ற சாத்தியக் கூறுகள் கட்டுப்படுத்தப்பட்டன.

விவசாயத்தை அபிவிருத்தி செய்யவும், உணவுப் பிரச்னையைத் தீர்க்கவும் புதிதாய் விடுதலை பெற்ற நாடுகளுக்கு சோவியத் யூனியன் பல வழிகளிலும் உதவியளித்து வருகிறது. இவ்வித ஒத்துழைப்புகளின் நோக்கம் அவ்வந்த நாடுகள் தமது தேசிய விவசாயத்தையும், தொழில்களையும் பலப்படுத்த உதவுவதேயாகும்.

இவ்விதத்தில் வளர்முக நாடுகளிலும் மொங்கோலியா, கியூபா, வியத்னும், லாவோஸ், கொரியா போன்ற சோஷலிஸ நாடுகளிலும் சோவியத் யூனியனின் உதவிகளால் விவசாய, தொழிற்துறை வளர்ச்சிகளுக்காக 1000க்கும் மேற்பட்ட தொழிற் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன அல்லது நிறுவப்பட்டுகின்றன.

சோஷலிஸ நாடுகளின் உதவிகள் பயனுறுதியுள்ளவை, தன்னலமற்றவை, நியாயமானவை என்பதையும் முதலாளித்துவ நாடுகளின் உதவிகளைவிட இவ்வுதவிகள் அடிப்படையிலேயே வித்தியாசமான கோட்பாடுகளைக் கொண்டவை என்பதையும் வளர்முக நாடுகளின் அரசுகளும் பொதுமக்களும் அறிந்தேயிருக்கிறார்கள்.

உதாரணமாக பல மூன்றும் உலக நாடுகளில் தனது செல்வாக்கை நிலைநிறுத்தவும் அங்கு தனது போர் முக்கியத்துமிக்க நலன்களைப் பெறுவதற்குமே அமெரிக்க ஏகாதிபத்தியம் உணவு ''உதவி''யைப் பாவித்திருக்கிறது. இதில் ஆகக் கேடுகெட்ட செயல் தானிய விநியோகத்தை அரசியல் நிர்ப்பந்தத்திற்கான ஆயுதமாகப் பாவிப்பதேயாகும். அமெரிக்காவின் உத்தரவுகளுக்கு அடிபணியாதவர்கள் உணவுச் சந்தையிலிருந்து விலக்கப்படுகிறார்கள். கியூபாவுக்கெதிரான உணவுத் தடையை ஏற்படுத்தி 20 ஆண்டுகளாகிவிட்டன, இந்தத் ''தண்டனை'' இப்போது நிகரகுவாவுக்கும் காலனித்துவத்திலிருந்து விடுதலைபெற்ற பல



நாடுகளுக்கும்கூட விரிவாக்கப்பட்டுள்ளது. அதை சோவியத் யூனியனுக்கும் மற்றுப் பல சோஷலிஸ நாடுகளுக்கு மெதிராகவும் பாவிக்கவும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன,

ஆனால் அதே வேளையில் சர்வதேச உழைப்புப் பிரிவினை மற்றும் சர்வதேச வர்த்தகத்தின் அனுகூலங்களை கைதுறக்கவும் சோவியத் யூனியன் தயாராயில்லை. இது சோ. க. க. மத்திய கமிட்டி மே பிளீனரி கூட்டத்தின் தஸ்தாவேஜுகளிலும் பிரதிபலிக்கிறது.

விவசாய—தொழிற் கூட்டின் துறைகளால் உருவாக்கப்பட்ட பொருட்களைப் பரிமாறிக்கொள்வதில் சோஷலிஸ நாடுகளுடன் நீண்டகாலமாக ஒத்துழைத்து சோவியத் நாடு வெற்றியீட்டியுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளிற்தான் நாங்கள் ப. பொ. உ. க. நாடுகளுக்கு ஒரு கோடி 5லட்சம் தொன் தானியங்களையும், 23 லட்சம் தொன் பருத்தி இழைகளையும், 472,000 தொன் மீன் மற்றும் மீன் உற்பத்திகளையும், 541,000 தொன் தாவர எண்ணெய்யையும் ஏற்றுமதி செய்து அதே வேளையில் 14 லட்சம் தொன் இறைச்சி—இறைச்சியுற்பத்திப் பொருட்களையும், ஒரு கோடி 70 லட்சம் தொன் சுத்திகரிக்கப்படாத சீனியையும், 20 லட்சம் தொன் பழங்களையும், பன்னூறாயிரம் தொன் மரக்கறிகளையும் இறக்குமதி செய்தோம். 1976 முதல் 1980வரை சோவியத் யூனியன் ப.பொ.உ.க. நாடுகளிலிருந்து 26000 டிராக்டர்கள், 141,000 தொன்கிருமிநாசினிகளை இறக்குமதி செய்து 178,000 டிராக்டர்கள் ஒருகோடி 10லட்சம் தொன் கனிஜ உரங்களையும் ஏற்றுமதி செய்திருக்கிறோம்.

முதலாளித்துவ நாடுகளிலுள்ள ஸ்தாபனங்களும் கம்பனிகளும் சோவியத் யூனியனுடன் அபிவிருத்தி ஒத்துழைப்புகளை மேற்கொள்வதற்கு உணவுத்திட்டம் பெரும் உந்துதலை ஏற்படுத்தியுள்ளது. எவ்வித பாகுபாடோ அரசியல் நிர்ப்பந்தமோ இன்றி ஒத்துழைப்பையும் பரஸ்பர பயன்மிகு வர்த்தகத்தையும் மேற்கொள்ள விரும்பும் எவருக்கும் நாம் ஆதரவு நல்குவோம்.

உலக உணவுப்பிரச்னை வெற்றிகரமாகத் தீர்க்கப்படுவது சமாதானப் போராட்டத்துடனும் சர்வதேச பதட்டத்தைத் தணிப்பதுடனும் நெருங்கிய சம்பந்தமுடையது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும், அரசாங்கமும் ஆயுதப் போட்டியை நிறுத்துவதையும் எல்லா மக்களுடனும் நல்ல அண்டையயல் உறவுகளை பேணுவதையும் ஆதரிக்கிறது—தொடர்ந்து ஆதரிக்கும். ஆயுதப் டரிகரணத்தில் சாதகமான பலாபலன்களேற்பட்டால் வளர்முக நாடுகளுக்கு உதவுவதுட்பட முழு உலகிலும் விவசாயத்தை அபிவிருத்திசெய்ய பெருமளவு நிதியை ஒதுக்க உதவியாயிருக்கும்.

வரலாறும் அனுபவமும்

லெனினுடைய கட்சியின் 80 வது ஆண்டு விழாவை ஒட்டி

# ஒருசிறு தீப்பொறி ஓர் பெருஞ்சுவாலையாகும்...

1983ன் கோடைகாலத்தில் ரஷ்ய சமூக—ஜனநாயக தொழிற் கட்சியின் இரண்டாவது காங்கிரஸின் 80வது ஆண்டுவிழா கொண்டாடப்படவுள்ளது. சிதறிப்போயிருந்த சமூக—ஜனநாயக அமைப்புகளையும் குழுக்களையும், சங்கங்களையும் புதியவகையிலான ஒரு மார்க்ஸிஸ கட்சியாக, ஒரு சமூக புரட்சிக் கட்சியாக ஐக்கியப்படுத்துவதற்குப் பல்லாண்டுகாலமாக உழைத்த லெனினதும் அவருடைய சகாக்களினதும் பணிகளுக்கு மகுடம் சூட்டுவதுபோல இந்தக் காங்கிரஸ் அமைந்தது.

லெனின் சைபீரியாவில் கழித்த நாட்களில் (1897—1900) இவற்றிற்கான பணிகளில் செயன்முனைப்பாக ஈடுபட்டார். பாட்டாளி வர்க்கக் கட்சியொன்றின் அவசியப்பாட்டினை வலியுறுத்திய அவர் முதலாவது அனைத்து ரஷ்ய சட்டவிரோத அரசியற் பத்திரிகையாகிய ''இஸ்க்ரா'' வினை (தீப்பொறி) 1900 டிசம்பர் மாதம் வரை வெளியிட்டுவந்தார். புரட்சிகக் கொள்கையைப் பரப்புவதும், கட்சியின் வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதும், புதியவகையிலான மார்க்ஸிஸக் கட்சிக்கான தந்திரோபாய, ஸ்தாபன ரீதியிலான கொள்கைகளை உருவாக்குதல் என்பவற்றை இது இலக்காகக் கொண்டிருந்தது. ''ஒருசிறு தீப்பொறி ஓர் பெருஞ்சுவாலையாகும்''—இப்பத்திரிகைக்காக லெனினால் தெரிவு செய்யப்பட்ட தாரக மந்திரம் இதுவேயாகும். கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் குறிப்பிட்டதைப்போன்ற மேற்குறிப்பிட்ட பணிகளை நிறைவுசெய்வதில் இப்பத்திரிகை பெரும் பங்குப்பணியை ஆற்றியது.



ரஷ்ய சமூக ஜனநாயக தொழிற்கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் 1903, ஜூலை 17ந் திகதி புறூசெல்ஸில் ஆரம்பமாகியது.

நிகழ்ச்சிநிரலிற் குறிப்பிடப்பட்ட விவாதங்கள் முடிவுற்றதும் பிரதிநிதிகளின் ல பிரிவினரிடையே சலசலப்பு ஏற்பட்டது. காங்கிரஸில் பலதரப்பட்ட அபிப்பிராய பேதங்கள் உருவாக்கப்பட்டுள்ளதையும் கட்சியில் பிளவுகளை ஏற்படுத்த முனைபவர்களுக்கெதிராகப் போராட்டமொன்றை நடாத்தவேண்டிய நிர்ப்பந்தமொன்று உருவாகியுள்ளதையும் லெனின் உணர்ந்துகொண்டார். ''இஸ்க்ரா'' குழுவின் 51 வாக்குகளில் 33 வாக்குகள் மட்டுமே லெனினிக்கு ஆதரவாக இருந்தன, 10 வாக்குகள் ''குவாக்மயர்'' என்றழைக்கப்பட்ட ஊசலாட்டக் குழுவினருக்கும், 8 வாக்குகள் ''இஸ்க்ரா''வின் மார்க்கத்னை வெளிப்படையாகவே எதிர்த்த பொருளியல்வாதிகள்1 அல்லது ''பண்டிஸ்டுகள்'' ஆகியோருக்கும் சாதகமாக இருந்தன. எவ்வாறிருந்தபோதிலும் லெனினுடைய ஆதரவாளர்களே பெரும்பான்மையாக இருந்தமையால் சகல பிரச்னைகளிலும் ''இஸ்க்ரா'' அணியினரே வெற்றிகளை ஈட்டினர். ஆயினும் இதற்குப் பின்னரும் பிளவுகள் அதிகரித்தன: லெனினுடைய ஆதரவாளர்கள், ''இஸ்க்ரா'' அணியினர் 24 வாக்குகளையும், சந்தர்ப்பவாதிகள் 9 வாக்குகளையும் கொண்டிருந்தனர். இஸ்க்ராவாதிகளல்லாதோருக்கு மாற்ரோவ்3 தலைமைதாங்கினர்.

---

1. பொருளியல்வாதிகள்—பாட்டாளி வர்க்கம் பொருளாதார தேவைப்பாடுகளுக்காக மட்டுமே போராட்டம் தொடுக்கவேண்டுமென்றும், புரட்சிகரச் சித்தாந்தத்திற்கு மிகக்குறைந்த முக்கியத்துவமே வழங்க வேண்டுமென்றும் கூறிவந்த, ரஷ்ய சமூக ஜனநாயகத்தில் நூற்றூண்டின் திருப்பத்தின்போது சந்தர்ப்பவாதப் போக்கினைக் கடைப்பிடித்தவர்களின் பிரதிநிதிகள்.

2. பண்டிஸ்டுகள்—பண்ட் என அழைக்கப்படும், லித்துவேனியா, போலந்து, ரஷ்ய பொது யூதஇன தொழிலாளர் சங்க உறுப்பினர்கள். 1898—1912ல் ரஷ்ய சமூக ஜனநாயக விடுதலைக் குழுவினர்.

3. யூலி மாற்ரோவ் (1973—1923) ரஷ்ய பாட்டாளி வர்க்க இயக்கத்தில் செயன்முனைப்பாகப் பணியாற்றினர். ரஷ்ய சமூக ஜனநாயக விடுதலைக் கட்சியின் இரண்டாவது காங்கிரஸின்போது இவர் சந்தர்ப்பவாதப் பாதையைத் தேர்ந்தெடுத்ததால், ரஷ்ய பாட்டாளி வர்க்க இயக்கத்தின் சந்தர்ப்பவாதப் பிரிவினராகிய மென்ஷ்விக்குகளின் தலைவர்களில் ஒருவராக இருந்தார்.

# இணக்கமின்மை

வேலைத்திட்டக் கோட்பாடுகளையும், கட்சியின் பிரதான பத்திரிகையான ''ஸ்க்ரா'' வையும் சந்தர்ப்பவாதிகள் மிக மோசமாகத் தாக்கத் தொடங்கினார்கள். ''ஸ்க்ராவை'' கட்சியின் பிரதான பத்திரிகையாக ஏற்றுக்கொண்டால் கட்சியில் லெனினுடைய போக்கு வலுவடைந்துவிடுமென்பதையும், சந்தர்ப்பவாத பொருளியலாளர்களின் பத்திரிகையாகிய ''ரூபோச்சே டைலோ (தொழிலாளர் பாதை) நிறுத்தப்பட்டுவிடுமென்பதையும் அவர்கள் நன்கு உணர்ந்துகொண்டார்கள். வேலைத்திட்டம் பூரணப்படுத்தும்வரை பிரதான பத்திரிகையைத் தேர்ந்தெடுக்கும் தீர்மானத்தை ஒத்திப்போடவேண்டுமென்றும் அல்லது ஒரு பிரதான பத்திரிகையாக பல பிரதான பத்திரிகைகள் வெளியிடப்பட வேண்டுமென்றும் அவர்கள் பிரேரணையொன்றைக் கொண்டுவந்தார்கள். ஆனால் பண்டிஸ்டுகளின் இப்பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. இதுவே இவர்களுடனான போராட்டத்தின் முதலாவது வெற்றியாகும்.

ஆனாலும் இவர்களுக்கெதிரான பிரதான போராட்டமொன்று நிகழ்த்தப்படவேண்டுமென்று வெனின் கருதினார். அவருடைய கருத்து மிகவும் சரியானதாகும்.

''இஸ்க்ரா'' வினால் வகுக்கப்பட்ட வேலைத்திட்டம் மேலும் உக்கிரமாக சந்தர்ப்பவாதிகளினால் தாக்கப்பட்டது. பல்வேறு திருத்தங்களின் மூலம் இவ் வேலைத்திட்டத்தின் புரட்சிகரத்தன்மையையும், போர்க்குணத்தையும் குன்றச் செய்வதற்கு இவர்கள் முயற்சிகளை மேற்கொண்டார்கள். வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய பகுதியை அவர்கள் வன்மையாக எதிர்த்தார்கள். பாட்டாளிவர்க்கத்தின் பொருள் முதல் சூழ்நிலையைப் படிப்படியாக உயர்த்துவதன் மூலமும் வர்க்க முரண்பாடுகளை இல்லாதொழிக்கலாமென்றும், இச்செயற்பாடு சோஷலிஸத்தை நோக்கி இட்டுச்செல்லுமென்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் இந்த வாதத்தை நிராகரித்ததுமட்டுமின்றி சோஷலிஸ புரட்சியொன்றிற்கும், பாட்டாளிவர்க்க சர்வதேசியத்திற்கும் அவசியமான அடிப்படை மார்க்ஸிஸ நிலைபாடுகளை அங்கீகரிக்கவும் செய்தது.

விவசாயப் பிரச்னைகளில்கூட கூர்மையான முரண்பாடுகள் எழுந்தன. லெனின் விவசாயிகளை பாட்டாளி வர்க்கத்தின் பிரதான கூட்டாளிகளாகக் கண்டுகொண்டார். லெனினுடைய இக்கருத்து கட்சியின் இரண்டாவது காங்கிரஸினால் உருவாக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் விவசாயப் பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.



# வேலைத்திட்டத்தின் பாரிய பிரச்னை

இடைவேளையின் பின் காங்கிரஸ் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. பிரதிநிதிகள் தேசிய இனப்பிரச்னைகள் குறித்து விவாதித்தார்கள். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய பிரச்னை வேலைத்திட்டத்தின் அடிப்படைப் பிரிவுகளில் ஒன்றாக இருந்தது. பண்டிஸ்டுகள் இந்த நகல் திட்டத்திற்கு தமது எதிர்ப்புகளைத் தெரிவித்தார்கள். அத்துடன் தமது ''தேசிய. கலாசார சுயநிர்ணய'' கோரிக்கையை வேலைத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுமாறும் வலியுறுத்தினார்கள்.

புரட்சிகர போராட்டத்தில் கட்சியின் சக்திமிகு ஆயுதமான தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான ஷரத்துக்களை நிறைவேற்ற வேண்டியதன் அவசியப்பாட்டினை லெனின் தனது உரையில் வலியுறுத்தினார்.

தனது பிரேரணைகளுக்கு ஆதரவாகவும், பல்வேறுபட்ட சந்தர்ப்பவாதிகளின் பிரிவுகளுக்கு எதிராகவும் லெனினால் முன்வைக்கப்பட்ட வாதங்கள் பாட்டாளிவர்க்கக் கட்சியின் புரட்சிகர வேலைதிட்டத்தினை ஏகமனதாக அங்கீகரிக்குமளவிற்கு காங்கிரஸ் உறுப்பினர்களைக் கவர்ந்திருந்தன.

## கட்சியின் ஐக்கியம்

## இரண்டு வேறுபட்ட அணுகுமுறைகள்

சந்தர்ப்பவாதிகள் வேலைத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தபோதிலும் தமது போராட்டங்கள் யாவற்றையும் கைதுறந்துவிடவில்லை. இதனை அவர்கள் ஓர் யுத்தியாக மட்டுமே உபயோகித்தார்களென்பதனை மேற்கொண்டு நடைபெற்ற காங்கிரஸ் நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்தின. ஒருபுறத்தில் வேலைத்திட்டத்தினை அங்கீகரித்த அவர்கள் மறுபுறத்தில் உண்மையான புரட்சிகரக் கட்சியொன்றின் உருவாக்கத்தைத் தடை செய்வதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டார்கள்.

கட்சி விதிகளை உருவாக்குவதற்கான விவாதத்தின்போது அடிப்படையில் எதிரிடையான இரு அணுகு முறைகள் முன்வைக்கப்பட்டன. இஸ்க்ராவாதிகளுக்கும் பண்டிஸ்டுகளுக்கு மிடையில் மட்டும் கொள்கை ரீதியான இணக்கமின்மைகள் ஏற்பட்டுவிடவில்லை: மாற்றோவின் தலைமையிலான நிலையற்ற இஸ்க்ராவாதிகள் கூட சந்தர்ப்பவாதிகளின் முகாமில் இணைந்து கொண்டார்கள்.

இது லெனினுக்கு முற்றிலும் வியப்பளிக்கக் கூடியதாக இருந்தது. லெனினால் பிரேரிக்கப்பட்ட நகல் விதிகள் கட்சி

யமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளை—ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகளை விபரிப்பனவாக இருந்தன. கட்சி அங்கத்துவம்பற்றிய முதலாவது பந்திகுறித்து கூர்மையான விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன.

லெனினால் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் புதிதாக கட்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. கட்சி உறுப்பினரகள் கட்சியின் வேலைத்திட்டத்தினை அங்கீகரிப்பதுடன் அதற்கு ஆதரவாகவும் செயற்பட வேண்டும். கட்சிக்கு பொருள்முதல் உதவிசெய்வதுடன் மட்டும் நின்றுவிடாது கட்சி அமைப்புக்களின் பணியில் நேரடியாகப் பங்குகொள்ளவும் வேண்டும், இவற்றுடன் கட்சியின் ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும்.

லெனினால் உருவாக்கப்பட்ட கட்சி நகல் விதிகளில் முதலாவது பந்தியினைத்தவிர ஏனைய யாவற்றையும் இரண்டாவது காங்கிரஸ் அங்கரித்தது.

முன்னைய உத்தியோக பூர்வமற்ற, ஒழுங்கற்ற சமூக-ஜனநாயகக் கமிட்டிகள், குழுக்கள் யாவற்றையும் அகற்றி அவற்றினிடத்தில் புதிய கட்சி இணைப்புகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் கட்சி விதிகளில் மாற்றங்கள் கொண்வரப்பட்டன, இவை யாவும் உண்மையான புரட்சிகர பாட்டாளி வர்க்க கட்சியின் ஸ்தாபனரீதியான அடித்தளத்தினை இடுவதற்கு உதவின.

வாலிபர் உலகம்

# இரு தலைமுறைகளின் நோக்கில் யுத்தமும் சமாதானமும்

ஏகாதிபத்தியத்தால் கட்டவிழ்த்துவிடப்பட்ட அணுவாயுதப் போட்டி இன்று உலகில் மனித வாழ்வையே அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. போரும் சமாதானமும் எல்லோருக்குமே பொதுவானது.

இங்கு சோவியத்தின் இரு தலைமுறைகளைச் சேர்ந்த பயதோர் பர்லாட்ஸகி டி. எஸ்ஸி, (தத்துவம்) அவர்களும் அவரது மகன் அலெக்ஸியும் (மாஸ்கோ பல்கலைக்கழக மாணவன்) உரையாடுகிறார்கள்.

மகன்: எனக்கு நினைவிலுள்ள நாளிலிருந்தே நான் பிறப்பதற்கு முன்—இருபதாண்டுகளுக்கு முன்—நடந்த யுத்தத்தைப் பற்றி *(1939-1945)* கேள்விப்படுகிறேன். வரப்போவதைப் பற்றியும் பேசுவதைக் கேள்விப்படுகிறேன். ஏன் இப்படி யுத்தம் பற்றி அடிக்கடி பேசப்படுகிறது? இதெல்லாம் முடிந்ததைப் பற்றி நினைத்துப் பார்ப்பதா அல்லது வருவதைப் பற்றிய எச்சரிக்கையா?

தந்தை: பழைய தலைமுறையினரான எங்களால் மறக்க முடியாததென்பதால்தான் நீங்களெல்லாம் கடந்த அந்த யுத்தத்தைப் பற்றிக் கேள்விப்படுகிறீர்கள். வரவிருக்கும் யுத்தத்தை எந்தவிதத்திலாவது நாம் தவிர்க்க விரும்புவதாலேயே எதிர்கால யுத்தம் பற்றியும் நீங்கள் கேள்விப்படுகிறீர்கள். யுத்தத்திலிருந்து மீளாதவர்களின் நினைவை நீங்கள் மறக்கக் கூடாது என்றும், யுத்தம் எப்படி ஆரம்பித்தது, எம்மால் அதை ஏன் தடுக்கமுடியவில்லை, வெற்றியின் விலை என்ன என்பனபற்றியெல்லாம் நீங்கள் அறிய வேண்டுமென்றும் விரும்புகிறோம்;

முந்திய யுத்தத்தை மறந்து ஒரு புதிய தலைமுறை உருவானால் ஒரு புதிய யுத்தம் வெடிக்கும் என்று அரசியல் வாதிகள் கூறுகின்றார்கள். கடந்த காலத்தின் படிப்பினைகளை அறியாமல் உங்கள் தலைமுறை வளரக்கூடாது.

மகன்: அணுக்குண்டைப் பற்றிய செய்திகள் உங்களிடம் என்ன பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன?

தந்தை: நான் நிலைதடுமாறிப் போனேன். அதன்பின் அடிக்கடி ஒரு கனவு தோன்றும்: முழு உலகிலுமே குண்டுகள் வெடிக்கின்றன, உலகமே தீக்கோளமாய் எரிகிறது. இதைக் கண்டு திகிலுற்று விழித்துக்கொள்வேன்...

மகன்: குண்டுகளைத் தடைசெய்யவே முடியாதா?

தந்தை: அணுவாயுத உற்பத்தியையும் பாவனையையும் தடுப்பது சம்பந்தமான கோரிக்கையை 1946ல் சோவியத் யூனியன் அமெரிக்காவுக்குச் சமர்ப்பித்தது. அன்று அமெரிக்க ஜனாதிபதியாயிருந்த ட்ரூமன், ஏனைய மேற்குலகத் தலைவர்களுடன் சேர்ந்து அதை மறுத்துவிட்டார். இருபதாம் நூற்றாண்டை சமாதானம் மிக்கதாக மாற்றும் சந்தர்ப்பம் இப்படித்தான் இல்லாமற்போயிற்று.

மகன்: என்றாலும் இன்னமும் ஒரு அணுவாயுதப் போர் வெடிக்கவில்லைதானே?

தந்தை: நாம் சிந்தித்துப் பார்க்கலாம்—ஒரு அணு யுத்தத்தைத் தடுக்க எப்படி முடிந்தது? பரஸ்பரம் அழிவுகளால் நாம் அச்சுறுத்தப்படுவதனால்தான் யுத்தம் என்பதை நினைத்துப் பார்க்க முடியாதிருக்கிறதா? அல்லது இரு அமைப்புகளுக்கிடையிலான படைகளின் இன்றைய கூட்டினால் யுத்தத்தில் (எவரும்) வெற்றிபெற முடியாதென்பதனாலா? உலகில் இன்று ஏறக்குறைய இராணுவ சமநிலை இருக்கிறது என்பது மட்டும் இதற்குக்காரணமல்ல; யுத்தம் தடுக்கப்பட்டிருப்பதன் காரணம் பல அரசுகளும், நாடுகளும் யுத்தத்தை எதிர்க்கின்றன என்பதுதான்.

மகன்: இன்னொரு யுத்தத்தைத் தொடங்க உலகில் ஒரு புதிய ஹிட்லர் இல்லையே...

தந்தை: உண்மைதான். 2ம் உலக யுத்தத்திற்கு பின் அவ்விதத் தலைவர்கள் உலகில் இல்லை. ஆனால் ஒரு மனோநிலையில் மற்றவருக்குச் சந்தர்ப்பமளிக்காமல் முதல் தாக்குதலை மேற்கொள்ளக் கூடியவர்களிருக்கிறார்கள்.

இருப்பினும் பொது அறிவே காலத்தை கொண்டு செல்கின்றது. அரசியலில் அச்சமே மிகக் கேடுகெட்டதாகும். இத்துறையில் மிக முக்கியமாகத் தேவையான

பல்துறைப் பயிற்சி நிலையம்



குணம் எவ்வித அரசியல் நடவடிக்கையிலும் முன்னறிவும், நடைமுறையையும் விளைவுகளையும் தெளிவாகப் புரிந்துகொள்ளும் தன்மையுமேயாகும்.

மகன்: ஆனால் அணுவெப்பாற்றல் ஆயுதப் போட்டி முடிவைப் பொது அறிவு உத்தரவாதம் செய்யவில்லையே. அதை முற்றாக ஒழிப்பது சாத்தியமா?

தந்தை: ஆயுதப் போட்டி நம்பமுடியாத் உந்துதலைப் பெற்றுள்ளது. அதை நிறுத்துவதற்கு மாபெரும் முயற்சிகள் தேவை. இந்த ஆயுதப் போட்டி எப்போதும் உலகை யுத்த விளிம்பிற்கே இட்டுச் செல்கிறது. புதிய நாடுகளும் அதன்பால் ஈர்க்கப்படுகின்றன. எவ்வாறாயினும் பெரியதோர் அபாயம் திரண்டு வருகிறது.

மகன்: இரண்டாம் உலகப் போரின்போது (1939-1945) பொது அபாயமும், பொது எதிரியும் அமெரிக்காவையும் சோவியத் யூனியனையும் ஒன்றிணைத்தன எனக் கூறப்படுவதுண்டு. இப்போது பொது எதிரியோ, பொது அபாயமோ இல்லை எனக்கூறப்படுகிறது, எனவே தவிர்க்க முடியாத பிணக்கு சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையேதான்.

தந்தை: இதற்கான என் வாதம் இதுதான். அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய இரு நாடுகளிக்குமான ஆபத்து இப்போது அவை பாஸிசத்தை எதிர்த்துப் போராடியபோதைவிட பத்து மடங்கு அதிகமானதாகும். முற்று முழுதான அழிவு என்பதே பெரும் அச்சுறுத்தலாயுள்ளது. ஒரு உலக யுத்தம் எப்படி, எப்போது ஏற்பட்டு ஆபத்தை ஏற்படுத்துமென எவருக்கும் தெரியாது. ஆரம்ப எச்சரிப்பு அமைப்பிலான தொழில்நுட்பத் தவறா? ஒரு மூன்றாம் வல்லரசின் தூண்டுதலா? ஒரு பிராந்திய யுத்தத்தின் விஸ்தரிப்பா? ஒரு ஜெனரலின் அல்லது வேறெவரினதும் ஒரு பைத்தியக்காரச் செயலா?

அணுவெப்பாற்ற யுத்தத்தைப் பரீட்சிக்க ஓரிடம் தேவையாயிருக்கிறது. ஆனால் அந்த பரீட்சார்த்த இடம் முழு உலகையுமே உள்ளடக்கியதாகிவிடும்.

எனவே எமக்கு மேலே ஊசலாடிக் கொண்டிருக்கும் அபாயமே சோவியத் யூனியனும் அமெரிக்காவும் தம்மையே அழிவிலிருந்து காத்துக்கொள்ள இணைவதற்கான போதிய சான்றாயிருக்கிறது.

மகன்: அது சாத்தியந்தானா?

தந்தை: சாத்தியமானதுதான். ஆனால் மிகப்பெருமளவு கஷ்டமானதுமாகும். சோ. க. க. 26வது காங்கிர

ஸில் (1981ல்) அங்கீகரிக்கப்பட்ட 1980களுக்கான சமாதான வேலைத்திட்டம் ஒரு அணுவாயுத யுத்தத்தைத் தடுத்து தேசங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. 1982ல் எல். ஐ. பிரெஷ்னேவினால் முன்வைக்கப்பட்ட புதிய சமாதான கோரிக்கைகளும் இவற்றுள்ளடங்கும். கடந்த ஜூன் மாதத்தில் ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில் சோவியத் யூனியன், அணுவாயுதங்களைத்தான் ஒருபோதும் முதன் முதல் பிரயோகிக்காது என உறுதியளித்தது. அணுவாயுதப் போரின் கோரத்தை மனுக்குலம் அதிகமதிகமாக உணர்ந்து வருகிறது. உலகெங்கும் மாபெரும் வெகுஜன இயக்கங்கள் நடத்தப்படுகின்றன. சமாதானத்திற்கான எத்தனங்களைத் தமது கரங்களில் எடுத்துக் கொண்டிருப்பது கடைசிக் கணத்திலேயே என சாதாரண மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளார்கள். முற்போக்கான கொள்கையும், வெகுஜன நடவடிக்கைகளுமே சமாதானத்திற்கான பிரதான உத்தரவாதமாகும். இவ்விரண்டுமிருந்து முனைப்புடன் இடம் பெற்றால் யுத்தத்தைத் தடுக்கலாம். தனது சொந்த அழிவைத் தடுக்கின்ற போதிய பொது அறிவை மனிதகுலம் கொண்டிருக்கின்றது என்றே எதிர்பார்க்கிறேன், நம்புகிறேன்.

மகன்: அப்படியானால் அடுத்ததென்ன?

தந்தை: அடுத்து என்ன நடக்கும் என்பது உங்கள் தலைமுறையில்தான் தங்கியிருக்கிறது.



நெல்லி மலிஷேவா

# வளர்ச்சிப் பாதையில் சில கசப்பான அனுபவங்கள்

இரண்டாம் உலகப் போர் முடிந்ததற்குப் பின்னர், ஒரு காலத்தில் காலனி நாடுகளாயிருந்த மிகப் பெரும்பாலான நாடுகள் தமது அரசியல் சுதந்திரத்தைப் பெற்றுள்ளன. வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வறுமை, நோய்கள், எழுத்தறியாமை ஆகியவற்றுக்கு முடிவுகட்டுவதற்காக தமது சமூக மற்றும் பொருளாதாரப் பின்தங்கிய நிலைமையை எவ்வாறு போக்குவது, அரசியல் சுதந்திரம் மெய்யானதாக இருக்கவேண்டுமெனில் அதற்கு அத்தியாவசியமான பொருளாதார சுதந்திரத்தை எவ்வாறு பெறுவது என்ற பிரச்சினையை அவை முதலாவதாகவும், முதன்மையாகவும் சமாளிக்க வேண்டியிருந்தது.

ஆசியா, ஆப்பிரிக்கா, மற்றும் லத்தீன் அமெரிக்காவின் விடுதலை பெற்ற சில நாடுகள் ஒரு சோஷலிச வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுந்தன. அடிப்படையான சமூக மாற்றமானது. பொருளாதார சுதந்திரத்தை நோக்கி ஒரு பெரும் முன்னேற்றம் காண்பதற்கு அவற்றுக்கு வகை செய்தது. ஆயினும், சில வளரும் நாடுகள், சோஷலிச சீர்திருத்தத்தின் அடிப்படையில் ஏற்கனவே ஓரளவு முன்னேற்றம் அடைந்திருந்த போதிலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிற்போக்காளர்களின் நிர்ப்பந்தத்தின் கீழ், திரும்பவும் முதலாளித்துவப் பாதையில் பின்னோக்கிச் செல்ல வைக்கப்பட்டுள்ளன. எகிப்தும், சோமாலியாவும் இதற்கு உதாரணங்களாகும். ஒரு சமயத்தில் காணும் இவற்றில் ஒன்றாக இருந்தது. சோஷலிசத் திசை வழியிலிருந்து முதலாளித்துவப் பாதையை மீண்டும் தேர்ந்தெடுத்ததன் மூலம் இந்த நாடுகள் என்ன ஆதாயத்தை அடைந்தன, எதை இழந்தன என்பது இயற்கையான கேள்வியாகும்.

மத்திய கிழக்கில், முதலாவது தேசிய ஜனநாயகப் புரட்சியை நடத்திய எகிப்து, தனது சமூக, பொருளாதார முன்னேற்றத்தை நோக்கி வெகுதூரம் முன்னேறியது. அரசு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தையும், கேந்திரத் தொழில்களையும், போக்குவரத்து

சர்வீஸ்களையும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. பொதுத்துறை தேசியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு ஆயிற்று; 1960-ம் ஆண்டுகளில் இது. தொழிற்துறை உற்பத்தி முழுமையின் 85 சதவீதத்திற்குப் பொறுப்பாயிருந்தது. பல்லாயிரக்கணக்கான நிலமற்ற, அல்லது சொற்ப நிலத்தைக் கொண்டிருந்த ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் வழங்கப்பட்டது; குறைந்த பட்ச சம்பள மற்றும் ஊதிய விகிதங்கள் பல தடவை அதிகரிக்கப்பட்டன; உழைக்கும் மக்களுக்கு சம்பளத்தோடு வருடாந்திர லீவ், மற்றும் பென்ஷன் பெறும் உரிமை வழங்கப்பட்டது. கல்வி மற்றும் ஆரோக்கிய சர்வீஸ்களின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. மக்களின் வாழ்க்கையை சாராம்சத்தில் மேம்படுத்தி, அவர்களது வாழ்க்கைத் தரங்களை உயர்த்துகின்ற தொடர்ச்சியான பல நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டன.

சிறந்த ராஜியத் தலைவரான நாஸரின் தலைமையின் கீழ் எகிப்தியத் தலைமை, தமது சொந்த நாட்டின் விடுதலையையும் சுதந்திரத்தையும் முரணின்றி பாதுகாத்து வந்ததோடு, பிற நாடுகளின் சுதந்திரத்திற்காகவும் பாடுபட்டது, 50-ம் ஆண்டுகளிலும், '60-ம் ஆண்டுகளிலும் அரபு மக்களுடைய மற்றும் பிற கண்டங்களின் மக்களுடையவும் விடுதலை இயக்கங்களுக்கு எகிப்து ஆதரவளித்தது. அதே பொழுதில், ஏகாதிபத்தியத்துடன் எவ்வித சமரஸம் செய்து கொள்வதையும் நிராகரித்தது.

சாதாத் பதவிக்கு வந்த பின் சோஷலிசப் பாதையைக் கைவிட்டதனால் என்ன விளைவு ஏற்பட்டது? இன்று எகிப்தின் பிரதானமான பிரச்னை, அதனுடைய பொருளாதார, மற்றும் சமூக நெருக்கடியேயாகும். சாதாத் கடைப்பிடித்த ''இன்ஃபிடா'' அல்லது ''திறந்த-கதவு', பொருளாதாரக் கொள்கையின் நேரடி விளைவாகவே, அந்த நெருக்கடி மிக மிக உக்ரமடைந்துள்ளது. 1974-ல் துவக்கப்பட்ட இந்தக் கொள்கை, ''வருகின்ற சுபீட்சத்துக்கான வேலைத் திட்டம்'' என்று முன் வைக்கப்பட்டது. நாட்டில் முதலாளித்துவம் பலப்படுத்தப்படுவதற்கு ஆட்சி, பச்சைக் கொடி காட்டியது. இவ்வாறு, சாதாத், நடைமுறையில், ஜனாதிபதி நாசரின் கீழ் பின்பற்றப்பட்டு வந்த முற்போக்கான பாதையை நிராகரித்தார்.

மக்களின் நிலைமை படுமோசமாயிற்று. 'இன்ஃபிடா' கொள்கை, 'வருமான வினியோகத்தில் கடும் ஏற்றத் தாழ்வுகளுக்கு' இட்டுச் சென்றது என்று ஆளும் தேசிய ஜனநாயகக் கட்சியின் ஓர் அறிக்கையே ஒப்புக் கொண்டுள்ளது. முற்போக்கான எகிப்திய பொருளாதார நிபுணர்களின் மதிப்பீடுகளின்படி, இந்த ''ஏற்றத்தாழ்வுகளின்'' விளைவாக, நாட்டின் மக்கட் தொகையில் இருபதில் ஒரு



பங்காக உள்ளவர்கள், மொத்த தேசியப் பண்டத்தில் 80 சதவீதத்தை சுவீகரித்துக் கொண்டனர்; அதே பொழுதில், எகிப்தியர்களும் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் அன்றாட வாழ்க்கை நடத்துவதே கடினமாக இருந்தது; மேலும் 1 கோடியே 60 லட்சம் பேர் அதிகார பூர்வமான வறுமைக் கோட்டுக்கும் கீழே வசித்து வருகின்றனர் (தற்போதைய மக்கட் தொகை 4 கோடி 40லட்சம் லட்சம் பேர்களாகும்.)

சோஷலிச திசை வழியிலிருந்து, அவர்களின் தலைவர்கள் பின்னால் திரும்பிச் செல்வதன் விளைவாக, வளர்முக நாடுகள் நிச்சயமாக அனுபவிக்க வேண்டியுள்ளதன் விளைவுகளைப் பற்றிக் கூறுகையில், கானாவைப் பற்றியும், சோமாலியாவைப் பற்றியும் கூறாமலிருக்க முடியாது. 1966-ல், பிற்போக்கான, மேலை நாடுகளால் தூண்டிவிடப்பட்ட, ஆட்சிக் கைப்பற்றலில், குவாமி என்குருமாவின் முற்போக்கான ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அது, அந்த நாட்டில், சோஷலிசப் பாதையிலிருந்து முதலாளித்துவ வளர்ச்சிப் பாதைக்கு நாடு பின்னுக்குச் செல்வதற்கு வழி சமைத்தது. அதனுடைய எதிர்காலப் பாதை, தற்போது விரிவான விவாதப் பொருளாகியுள்ளது; 1981, டிசம்பர் 31-ல், தற்காலிக தேசப் பாதுகாப்புக் கவுன்சில் அதிகாரத்திற்கு வந்ததிலிருந்து, இந்த விவாதம் நடைபெற்று வருகிறது. கானாவின் வளர்ச்சியினது வரலாற்றில் இரு காலகட்டங்களின்-சோஷலிச மற்றும் முதலாளித்துவக் காலகட்டத்தின்—பரிசீலனை அடங்கியுள்ளது: இந்த ஒவ்வொரு வளர்ச்சிப் பாதையும் மக்களுக்கு என்ன சாதித்தது என்பது பற்றிய பரிசீலனையாகும் இது.

25- ஆண்டுகால சுதந்திர வாழ்வில், கடைப்பிடிக்கப்பட்ட பாதையை மதிப்பிடுவதில், தாங்கள் சிறந்தவற்றை குவாமி என்குருமாவின் காலத்தில்தான் அடைந்தோம் என்று மிகப் பெரும்பாலான கானா மக்கள் நம்புகின்றனர், நாடுதழுவிய கட்டாய ஆரம்பக் கல்வி மற்றும் உயர்நிலைக் கல்வி அப்போது அமலாக்கப்பட்டது. நாட்டின் உழைக்கும் மக்கள். இலவசமான மருத்துவப் பராமரிப்பை அனுபவித்தனர். வேலையின்மையை குறிப்பாக இளம் மக்களிடையே—ஒழிக்கும் ''உழைப்புக் குழுக்கள்'' அமைக்கப்பட்டன. அவை இளம் மக்கள் தொழிற் பயிற்சி பெறுவதற்கும், தொழில்களைக் கற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பளித்தன. அவை பின்னர், விவசாயத்திலும், அப்போது தான் உருவாகி வந்த தொழில்துறையிலும், அவர்களுக்குப் பேருதவியாய் இருந்தன.

நாட்டின் பொருளாதார சாதனைகள் யாவும் முதல் குடியரசின் காலத்தில் ஏற்பட்டவையேயாகும்—நவீன தேமா துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டது, தேசியத் தொழில்துறைக்கும், விவசாயக் கூட்டுறவுகளுக்கும் அடித்

தளமிட்ட எண்ணற்ற தொழில் நிலையங்களும் இவற்றில் அடங்கும்.

முதலாளித்துவப் பாதையில் 16 ஆண்டுகள் பயணம் செய்தது மக்களின் வாழ்க்கைத் தரத்தை வீழ்ச்சியுறச் செய்தது, நாட்டைப் பொருளாதாரக் குழப்பம் மற்றும் பொருளாதார, சீரழிவு எனும் படுகுழியில் தள்ளியது. லஞ்ச ஊழல் எங்கும் பரவியது. புதிய தலைமை, முந்திய ஆட்சிகளிடமிருந்து ஒரு கடினமான பிதுரார்ஜிதத்தைப் பெற்றது. 100 சதவீதத்திற்கு அதிகமான பணவீக்க விகிதம், குறைந்து வந்த ஏற்றுமதிகள் மதிப்புக் குறைந்து வந்த தேசியச் செலாவணி· பள்ளி வயதுள்ள குழந்தைகளில் 30 சதவீதத்தினர் உயர்வான பள்ளிக் கட்டணங்களின் விளைவாக—முற்றிலும் எழுத்தறிவற்றவர்களாக இருந்தனர். இலவச சுகாதார சேவை ரத்து செய்யப்பட்டது, மருத்துவ ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. மருத்துவமனை சிகிச்சை பெறுவது பணக்காரர்களின் தனிச் சலுகையாயிற்று. மேலைய ஏகபோகங்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏதும் செய்யாமல், செல்வத்தை மட்டும் கொள்ளையடித்து வந்தன.

சோமாலியாவுக்கும் இதே கதியே ஏற்பட்டது. புரட்சியின் சில ஆரம்ப ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட சமூக மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் மக்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தின. ஆனால், முன்னேற்றம் ஏற்பட்ட அந்த ஆண்டுகள், இன்று சோமாலியாவுக்குக் கடந்த காலகனவு போலாயிற்று. ஒரு சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைப்பதல்ல, மாறாக, அண்டை நாடுகளின் சில பிரதேசங்களை கைப்பற்றிக் கொள்வதன் மூலம், ஒரு ''மகா சோமாலியா''வை உருவாக்குவதையே, தனது முன்னுரிமைக் கடமை என, அதனுடைய தலைமை கருதுகிறது. அதை அடைவதற்காக, ஏராளமான செல்வாதாரங்கள் வீணடிக்கப்படுகின்றன: இது மக்களின் வாழ்க்கைத் தரங்களை மோசமாக பாதித்து வருகிறது. சோமாலியாவின் சில பிரதேசங்களில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது, பள்ளிகளும், மருத்துவ மனைகளும் பாழடைந்து வருகின்றன. அவற்றில் பல இருந்த இடமே தெரியவில்லை. சுமார் 1[illegible] லட்சம் ஹெக்டேர் சாகுபடி நிலம், தரிசாகக் கிடக்கிறது.

தற்போது சோமாலியாவில் ஆட்சி புரிந்து வருவதைப் போன்ற ஆட்சிகள், சோஷலிச வளர்ச்சிப் பாதையின் கோட்பாடுகளைக் கைவிட்டபோதெல்லாம், அவை, ஏகாதிபத்தியத்துடன் கைகோர்த்துச் செல்லலாயின. மேற்கொண்டு ஆக்கிரமிப்புச் செயல்களுக்கு ஆயுதங்களைப் பெறுவதற்கு, சையதுபாரே அரசு, அந்த நாட்டின் பிரதேசத்தை, அந்தப் பிராந்தியத்தின் பிறநாடுகளுக்கு எதிராக உபயோகப்படுத்துவதற்கான அமெரிக்க ராணுவ தளங்களுக்கான இடமாக அளித்துள்ளது. இவ்வாறுதான்,



சோஷலிச லட்சியங்களை நிராகரித்ததானது, காலப்போக்கில், சோமாலியாவின் அரசுரிமையையே பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

முதலாளித்துவப் பாதைக்கு மாறிச் சென்றதன் விளைவுகள்—எந்த நாடு சம்பந்தப்பட்டதாயினும் சரி—ஒரே மாதிரியாகவே உள்ளன. முதலாளித்துவத்தை நோக்கிப் பாய்வதானது தவிர்க்க முடியாமல் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை வீழ்ச்சியடையச் செய்கிறது. அதன் விளைவாக, ஊழல்மிக்க ஆளுங் கோஷ்டி மேலும் கொழுக்கிறது. சர்வதேச ஏகாதிபத்திய சக்திகளுடன் அது கூட்டுச் சேருகிறது. தேசிய அரசுரிமைக்கே ஆபத்தை ஏற்படுத்துகிறது.

ஜெனடி சுப்றின்
விஞ். வேட்பாளர் (பொருளியல்)

# ஆசியாவில் பொருளாதார ஒருமைப்பாடு

உலக பொருளாதாரத்தின் பொதுவான அபிவிருத்தி விதிகளினால் ஏற்பட்ட பொருளாதார ஒருமைப்பாட்டு வழிமுறைகள் சர்வதேச குணும்சமொன்றைப் பெற்றிருப்பதுடன் வளர்முக நாடுகளுட்பட வேறுபட்ட சமூக—பொருளாதார முறைகளைக் கொண்ட நாடுகளையும் தழுவியதாகவும் காணப்படுகின்றது.

வர்த்தகம், நிதி, கைத்தொழில், போக்குவரத்து மற்றும் ஏனைய பொருளாதாரத் துறைகளில் உள்ள பிணைப்புகளை வலிமைப்படுத்துவது, விஸ்த்தரிப்பது என்பவற்றை இலக்காகக் கொண்ட பல்வேறுபட்ட ஒப்பந்தங்களைச் செய்துள்ள 90ற்கும் மேற்பட்ட வளர்முகநாடுகள் 1970க்களின் பிற்பகுதியில் பரஸ்பர பொருளாதார ஒத்துழைப்புச் செயற்பாடுகளில் போதியளவு அனுபவத்தைப் பெற்றுள்ளன. கலோனியலிஸத்திற்குப் பிற்பட்ட காலப் பகுதியில் ஆசியப் பிரதேசம் இவ்வாறான ஒத்துழைப்பில் போதியளவு அனுபவத்தைப் பெற்றிருந்தது. இவை இரு பக்க, பல்பக்க அடிப்படையில் மிகப்பரவலான அடிப்படையில் பிரயோகிக்கப்பட்டுவருகின்றன.

இந்த ஒத்துழைப்பைப் பகுத்தாராயும் செயற்பாடு ஆசியாவில் பொருளாதார ஒருமைப்பாட்டு வழிமுறைகளின் பரிணாமத்தைக் கண்டறிவதற்குமட்டுமின்றி இதன் பொதுவிதிகள் சிலவற்றை அறிந்துகொள்வதற்கும் வழிசமைத்துள்ளது.

## தொகைரீதியான வளர்ச்சி

1940க்களின் பிற்பகுதிமுதல் இப்பிரதேசத்திலுள்ள வளர்முகநாடுகள் பரஸ்பர பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதிலும், விஸ்த்தரிப்பதிலும் அதிக அக்கறை காட்டிவருகின்றன, இந்த இலக்கினை அடைவதை நோக்கமாகக் கொண்டு ஆசியாவில் பல பொருளாதார அமைப்புக்கள் உருவாகிவருவது இதனை நன்கு பிரதிபலிப்பதாய் உள்ளது.



1940-1950 காலப்பகுதியில் இவ்வாறான அமைப்புகள் எதுவுமே இருக்கவில்லை, இதேபோது 1960க்களில் ஒரு டசினுக்கு மேற்பட்ட அமைப்புகளும், இதற்கடுத்த தஸாப்தத்தில் ஏறக்குறைய 50 அமைப்புகளும் இருந்தன. இவையாற்றினுள்ளும் மிக முக்கியமான அமைப்பு ஆசியாவில் கலோனியலிஸத்திற்குப் பிற்பட்ட அபிவிருத்திக் காலகட்டத்தின் ஆரம்பத்தில்—1947ல் நிறுவப்பட்ட "ஆசியாவிற்கும், தூரகிழக்கிற்குமான ஐ.நா, பொருளாதாரக் கமிஷனேயாகும். 1970க்களில் இதன் பெயர் "ஆசியாவிற்கும், பசுபிக்கிற்குமான பொருளாதார, சமூகக் கமிஷன்" எனப் பெயர்மாற்றஞ்செய்யப்பட்டது.

1960க்களில் இந்த அமைப்பின் கண்காணிப்பின் கீழ் பல நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. "பொருளாதார அபிவிருத்தி, திட்டமிடல் என்பவற்றிற்கான ஆசிய நிறுவனம்" (1964), "ஆசிய நெடுஞ்சாலை இணைப்புக் கமிட்டி" (1964), "ஆசிய கைத்தொழில் அபிவிருத்திக் கவுன்ஸில்" (1966), "ஆசிய, பசுபிக் தெங்குப் பொருட் சமாசம்" (1969) என்பவை இவற்றுட் சிலவாகும்.

வளர்முக நாடுகளில் பிரதேசரீதியான பொருளாதாரச் சங்கங்களும் தோன்ற ஆரம்பித்தன. 1961ல் உருவாக்கப்பட்ட தென்கிழக்காசிய சபை (மலாயா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ்), 1967ல் இச்சபை மேலும் விரிவாக்கப்பட்டு இந்தோனேஸியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளை உள்ளடக்கியதாக தென்கிழக்காசிய நாடுகளின் சபை என்ற பெயரினையும் பெற்றது, 1964ல் அபிவிருத்திக்கான பிரதேசக் கூட்டமைப்பு என்ற பெயரில் துருக்கி, ஈரான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளை இணைக்கும் அமைப்பொன்று உருவாக்கப்பட்டது, இதே ஆண்டில் ஜோர்தான், ஈராக், சிரியா, எகிப்து ஆகிய நாடுகளை உள்ளடக்கிய அராபிய பொதுச் சந்தை என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டது.

1960க்களில் அமைப்புகள் துரித வளர்ச்சி பெற்றன. இவற்றின் செயற்பாடுகள் பல்வகைப்பட்டனவாக உள்ளன. ஆசியாவில் பொருளாதார ஒருமைப்பாட்டுச் செயற்பாடுகளையும், பரிணாமத்தையும் இவை பிரதிபலிப்பதுடன், இக்கண்டத்திலுள்ள வளர்முக நாடுகளுக்கிடையில் பொருளாதார ஒத்துழைப்பையும் பலப்படுத்துகின்றன. 1970க்களில் இவ்வாறான மேலும் பல அமைப்புகள் உருவாகின, மேற்கு ஆசியாவிற்கான ஐ.நா. பொருளாதாரக் கமிஷன், ஆசிய புள்ளிவிபரவியல் நிலையம், பிரதேசரீதியான எண்ணெய் வள நிலையம், ஆசியாவின் கடலோரப் பிராந்தியங்களில் கனிஜ வளங்களைக் கண்டறியும் கூட்டுச்செயற்பாடுகளை ஒன்றிணைப்பதற்கான கமிட்டி, ஆசிய நெல் வர்த்தக நிதியம், தொழில்நுட்பப் பரிமாற்றங்களுக்கான பிராந்திய மத்தியஸ்தானம், ஆசிய மீள்காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

என்பவை இவற்றுள் சிலவாகும். 1970க்களில் பிரதேச ரீதியான பாவனைப்பொருட் சங்கங்கள் சிலவும் உதயமாகின. 1970ம் ஆண்டில் இயற்கை ரப்பர் உற்பத்தி நாடுகளின் சங்கமும்; 1971ல் ஆசிய மிளகு உற்பத்திச் சமாசமும்; 1974ல் மரப்பொருள் விநியோகச் சங்கமும்; 1976ல் சணல் ஏற்றுமதிநாடுகளின் நிறுவனமும் ஸ்தாபிக்கப்பட்டன.

இந்த அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த தோற்றப்பாடு பொருளாதார சுதந்திரத்திற்காகப் போராடும் ஆசிய மக்களுடைய நலன்களுடனும், அவர்களுடைய இலக்குகளை அடைவதற்கான கூட்டு முயற்சிகள், வழிமுறைகள் என்பவற்றுடனும் இணக்கமுடையதாகக் காணப்படுகிறது இதே நேரத்தில் இப்போக்கு ஒழுங்கற்ற அபிவிருத்தித் தன்மையையும் கொண்டுள்ளது. கலோனியலிஸத்திற்குப் பிற்பட்ட முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் ஆசிய நாடுகளுக்கிடையில் வளர்ச்சியடைந்துவரும் வேறுபாடுகளையும் இப்போக்குப் பிரதிபலிக்கிறது. இந்த வேறுபாடுகளினால் முரண்பாடுகளும், மோதல்களும் அதிகரித்து வருகின்றன. ராஜ்யங்களுக்கிடையிலான பொருளாதார அமைப்புக்களின் எண்ணிக்கை வளர்ச்சியடைந்து செல்வது இப்பிரதேசத்திலுள்ள வளர்முகநாடுகளுக்கிடையில் உருவாக்கப்படவுள்ள பொருளாதார ஒத்துழைப்பின் ஒருங்கிணைக்கப்பட்ட முறையினை நோக்கி இட்டுச் செல்லமாட்டாது.

## உபபிராந்திய இணையங்கள்

ஆசியாவில் பொருளாதார ஒப்பந்தங்கள், கூட்டுக்கள் என்பவற்றின் எண்ணிக்கை வளர்ச்சியடைவதுடன் சேர்ந்து உபபிராந்திய அமைப்புக்களின் பாத்திரமும், அவற்றின் முக்கியத்துவமும் வளர்ச்சியடைந்து வருகிறது.

ஆசியாவிலுள்ள அராபிய நாடுகள் எதுவுமே ஆசிய ஒருங்கிணைப்புப் பணிகளில் ஒருபோதும் பங்கு பற்றியதில்லை. அராபிய ராஜ்யங்களுக்கிடையில் பொருளாதாரக் கூட்டினை ஸ்தாபிப்பதை இலக்காகக் கொண்டு எடுக்கப்பட்ட பிரதான நடவடிக்கைகளில் 1945ம் ஆண்டில் நிகழ்வுற்ற அராபிய லீகின் உருவாக்கமும் ஒன்றாகும். இதன்பின்னர் அராபிய பொருளாதார அமைப்புக்களான அராபிய பொதுச் சந்தை (1964), அராபிய பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (1968), அராபிய அபிவிருத்தி நிதியம் (1970), அராபிய முதலீட்டுக் கம்பனி (1974), அராபிய நாணய நிதியம் (1977) என்பவை உருவாக்கப்பட்டன.

1960க்களின் பிற்பகுதியில் பிரபல்யமடைய ஆரம்பித்த "ஆசியான்" அமைப்பில் தென்கிழக்காசிய நாடு



கள் பல இணைந்தன. ஆசியாவில் கொடுப்பனவு சம்பந்தமான பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதற்காக 1972ல் ஐ.நா.வின் எஸ்கபே—எஸ்காப் செயலறையின் முன்னெடுப்புக்களினால் "ஆசியான் கிளியறிங் யூனியஸ்" 1972 டிசம்பரில் உருவாக்கப்பட்டது, ஆனால் இதில் இந்தியா, ஈரான், பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபால், இலங்கை, பர்மா ஆகிய ஏழு நாடுகள் மட்டுமே பங்குகொள்வதற்கு விருப்பம் தெரிவித்திருந்தன. இதற்கும் மேலாக ஆரம்ப காலத்தில் "ஆசியான் கிளியறிங் யூனியனின்" மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் தனியானதோர் கிளியறிங் ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ளுமாறு ஆசியான் உறுப்பு நாடுகளைத் தூண்டின. இதற்குமப்பால் ஏசியான் அபிவிருத்தி வங்கியொன்றை நிறுவுவதற்கும் திட்டமிடப்பட்டது.

அனைத்துப் பிராந்திய வர்த்தகச் சலுகைமுறையொன்றை உருவாக்குவதற்கு வளர்முகநாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் வியர்த்தமாகின. 1975ல் பாங்கொக்கில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் 13 ஆசிய நாடுகள் பங்குபற்றிய போதிலும் இந்தியா, பங்களாதேஷ், இலங்கை, லாவோஸ், தென்கொரியா ஆகிய நாடுகள்மட்டுமே உத்தேச ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. ஏனைய நாடுகள் இவ்வொப்பந்தத்தின் ஷரத்துகளில அதிருப்தியுற்றதால் இந்த அமைப்பில் இணைவதற்கு மறுத்துவிட்டன.

## இராணுவக் கூட்டுகள் வேண்டாம்

பொருளாதார ஒத்துழைப்புச் செயற்பாடுகள் அபிவிருத்தியடைந்து வரும்போது ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்ட, புதிதாக விடுதலையடைந்த நாடுகளைப் பெரிதும் கவர்ந்த இராணுவக் கூட்டுக்களின் முக்கியத்துவம் குன்ற ஆரம்பித்தது. 1950க்களில் கம்யூனிஸத்தைப் "பின்தள்ளுவதற்கு" உருவாக்கப்பட்ட சியாற்றோ, சென்றோ ஆகிய கூட்டுக்கள் 1970க்களில் இல்லாதொழிந்தது. கம்யூனிஸ விரோதச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதை இலக்காகக்கொண்டு 1966ல் உருவாக்கப்பட்ட ஆசியன் பசுபிக் கவுன்ஸில் (அஸ்பாக்)செயலிழந்துபோனது. வளர்முக நாடுகளின் பங்களிப்புடன் மேற்குறிப்பிட்ட நோக்கங்களைக் கொண்ட இராணுவக் கூட்டொன்றினை உருவாக்குவதற்கு ஏகாதிபத்திய பிற்போக்குச் சக்திகள் மீண்டும், மீண்டும் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக 1971ம் ஆண்டுல் ஒரேயொரு இராணுவ—அரசியல் ஒப்பந்தம் மட்டுமே கைச்சாத்திடப்பட்டது. இவ்வொப்பந்தத்தில் பிரிட்டன் அவுஸ்திரேலியா, நியூஸிலந்து, சிங்கப்பூர், மலேஷியா ஆகிய நாடுகள் கைச்சாத்திட்டன (அன்சுக்).

இந்த அமைப்பின் ஏகாதிபத்தியப் பங்காளிகள் இதன் செயற்பாட்டினை ஊக்குவித்து கடும் நடவடிக்கைகளை ஆற்ற முயன்றபோதிலும் இம்முயற்சிகள் யாவும் தோல்வியிலேயே முடிந்தன. ஆசியாவை அடித்தளமாகக் கொண்டு இராணுவக் கூட்டொன்றை உருவாக்க சர்வதேசிய ஏகாதிபத்தியம் பல முயற்சிகளை மேற்கொண்டது. இந்த அமைப்பின் உறுப்பினர்களை கம்யூனிஸப் பயமுறுத்தல்களிலிருந்து பாதுகாக்கவேண்டும் என்ற கற்பனைக் காரணத்தைக்காட்டி உள்நாட்டு அதிதீவிரவாதிகளின் ஆதரவுடன் இம்முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இராணுவ கூட்டுக்களை உருவாக்கவேண்டுமென்ற ஏகாதிபத்தியக் கொள்கைக்கு வளர்முகநாடுகள் காட்டி வரும் எதிர்மறையான போக்கு, ஆசியக்கண்டத்தில் உள்ள பொருளாதார அமைப்புக்களுடன் நேரடியாகத் தொடர்புறுத்தி இராணுவக் கூட்டுக்களை ஏற்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவுமே தோல்விகளில் முடிவடைந்துள்ளமையிலிருந்து தெளிவாகப் புலப்படுகிறது.

'ஆசியா அய் அப்ரிக்கா செகொட்னயா'
என்ற சஞ்சிகையிலிருந்து

# 80களில் அணிசேரா இயக்கம்

**மார்ச்சில் டில்லியில் நடைபெறவிருக்கும் அணிசேரா நாடுகளினது ராஜ்ய, அரசாங்கத் தலைவர்களின் 7வது மாநாடு கலோனியலிஸத்தினதும் ஆக்கிரமிப்பினதும் அனைத்து வடிவங்களை எதிர்த்தும், சமாதானத்திற்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் அணிசேரா இயக்கம் நடத்தும் போராட்டத்தில் முக்கிய மைல் கல்லாகத் திகழும்.**

**1961**இல் பெல்கிரேட்டில் நடந்த 25 ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க நாடுகளின் ராஜ்ய—அரசாங்கத் தலைவர்களினது முதலாவது மாநாட்டின் பின்னர் அணிசேரா இயக்கம் மாபெரும் வளர்ச்சியடைந்துள்ளது. இதில் இப்போது 150 கோடி மக்களைக் கொண்ட 100 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

தமது சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் கூட்டாகப் பாதுகாக்கவும், ஏகாதிபத்தியத்தையும் கலோனியலிஸத்தையும், மேலாதிக்க வாதத்தையும், இனவாதத்தையும் எதிர்த்த போராட்டத்திற்குத் தமது பங்களிப்பைச் செலுத்தவும் பெருவாரி இளம் சுதந்திர நாடுகள் திடவுறுதி பூண்டுள்ளதை அணிசேரா இயக்கம் உலகறியப் பிரகடனப்படுத்தியுள்ளது. நாடுகளுக்கிடையிலான உறவுகளில் நிர்ப்பந்தமும் வன்முறையும் உபயோகிக்கப்படுவதைக் கைதுறப்பதையும், சமத்துவத்தினதும் நீதியினதும் அடிப்படையில் சர்வதேச உறவுகளை ஜனநாயகப் படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு அரசியல் இயக்கமாக இவை தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளன.

தமது சாதனைகள் குறித்து அணிசேரா நாடுகள் பெருமிதம் அடையலாம். இவ்வளவு குறுகிய காலத்தில் மாபெரும் சக்தியாக மாறிய பிறிதொரு இயக்கத்தை வரலாற்றில் காணமுடியாது.

அணிசேரா இயக்கம் தோன்றியதற்கான காரணிகள் என்ன? இப்போதும் எதிர்காலத்திலும் இந்த இயக்கத்தின் பாத்திரத்தை நிர்ணயிக்கும் போக்குகளும் நிகழ்வுகளும் என்ன?

## நவீன உலகில் அணிசேரா இயக்கம்

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க மக்கள் உட்பட முழு மனித இனத்தின் மீதும் புரட்சிகரமான செல்வாக்கை வகித்தது. ஏகாதிபத்தியத்தின் மீது நிர்மூல அடியைக் கொடுத்த இது, தேசிய விமோசன இயக்கத்தின் எழுச்சிக்கும், கலோனியலிஸ அமைப்பின் தகர்வுக்கும் வழிவகுத்தது.

இரண்டாவது உலக யுத்தத்தில் ஜேர்மன் நாஸிஸமும் ஜப்பான் ராணுவவாதமும் நிர்மூலமாக்கப்பட்டமையும் உலகசோஷலிஸ அமைப்பின் உதயமும் உலகில் சக்திகளின் அணி அமைவை அடிப்படையிலேயே மாற்றியதுடன் தேசிய விமோசன இயக்கத்தின் வளர்ச்சிக்குச் சாதகமான நிலைமைகளைத் தோற்றுவித்தன.

அனைத்துக் கண்டங்களிலும் அலையடித்துப் பாய்ந்த தேசிய விமோசனப் புரட்சிகள் வரலாற்றின் முன்போதலை முடுக்கிவிட்டன. கடந்த மூன்று தசாப்தங்களில் 100க்கும் கூடுதலான நாடுகள் சுதந்திரத்தை வென்றெடுத்தமை பிரமாண்டமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

இரு எதிரெதிரான சமூக அமைப்புகளாகப் பிரிவுபட்ட உலகில் முன்னைய காலனி நாடுகள் புதியதொரு வாழ்வை நிர்மாணிக்க ஆரம்பித்தன. இந்த நிலைமைகளில் சர்வதேச அரங்கில் முனைப்பான பாத்திரத்தை வகிப்பது, பரிபூரண சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் ஈட்டுவது என்ற நோக்கங்களைக் கொண்ட சுயாதீனமான அயல்நாட்டுக் கொள்கையை கடைப்பிடிக்கத் தொடங்கின.

பெருவாரி வளர்முக நாடுகளுக்கு அணிசேராக் கொள்கை கட்டாயமானதாகியுள்ளது. இந்நாடுகளைத் தமது அரசியல், பொருளாதார செல்வாக்கு வட்டத்திற்குள் ஈர்த்துவைத்திருக்க ஏகாதிபத்திய வல்லரசுகள் எடுத்த முயற்சிகளுக்கு எதிரான சுதந்திரமடைந்த நாடுகளின் கூட்டு ஆட்சேபனையின் வெளிப்பாடாகவே அணிசேராமைக் கருத்துருவம் தோன்றியது. இன்று நமது காலத்தின் பிரதான போக்குகளுள் ஒன்றான உலக அரசியல் களத்தில் மிகப்பெருவாரி நாடுகளை ஈர்த்து நிற்கும் இப்போக்கு அணிசேரா இயக்கத்தின் செயற்பாடுகளில்



வெளிப்பாடு பெறுகிறது. கடும் போராட்டங்களில் வென்றெடுத்த தமது சுதந்திரத்தையும் சுயாதிபத்தியத்தையும் பாதுகாக்கவும், தமது உற்பத்திச் சக்திகளை வளர்க்கவும், தமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உசிதமான நிலைமைகளை உருவாக்கும் நோக்கத்துடன் சர்வதேச அரங்கில் சுயாதீனமான ஒரு மார்க்கத்தை கடைப்பிடிப்பதே அணிசேரா இயக்கத்தின் தார்ப்பரியம் எனக்கூறலாம்.

அதன் ஆரம்பம் முதல் அணிசேராக் கொள்கை புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளின் நலன்களில் தலையீடு செய்யப்படுவதையும், ஆயுதப் போட்டி முனைப்பாக்கப்படுவதையும், முன்னைய காலனிகள் கொள்ளையிடப்படுவதையும் எதிர்த்து முன்வந்தது. துவக்கம் தொட்டே அணிசேரா இயக்கத்தின் கொள்கை ஏகாதிபத்திய எதிர்ப்பு முனைப்பைக் கொண்டிருந்தது. ஆகவே தான் அணிசேராக் கொள்கை பின்வரும் கோட்பாடுகளைக் கொண்டதாகும்: ஏகாதிபத்தியத்தையும் கலோனியலிஸத்தையும் நவகலோனியலிஸத்தையும், இனவாதத்தையும் எதிர்த்த போராட்டம்; ராணுவ முகாங்களிலும் அணிகளிலும் சேராதிருத்தல்; நாடுகளுக்கிடையில் சமாதான சகஜீவனக் கொள்கையை வளர்ப்பது, பிறநாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமை.

உலகம் எதிரெதிரான அரசியல், ராணுவ முகாங்களாக பிரிந்திருப்பது உலக சமாதானத்திற்கும் சர்வதேச பந்தோபஸ்திற்கும் பயங்கர அச்சுறுத்தலாக உள்ளது என அணிசேரா நாடுகள் சரியாகவே கருதுகின்றன. இன்றுள்ள அரசியல், ராணுவ அணிகளைப் பலப்படுத்தவும், புதியனவற்றை உருவாக்கவும் ஏகாதிபத்தியம் எடுக்கும் முயற்சிகள் குறித்து இவை தமது கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றன.

அணிசேரா நாடுகள் கலோனியலிஸத்தின் எச்ச சொச்சங்களை ஒழிப்பதற்கான போராட்டத்தை உலக சமாதானத்திற்கான போராட்டத்துடன் இணைக்கின்றன.

## கஷ்டங்களும் பிரச்னைகளும்

அணிசேரா இயக்கம் சக்திமேல் சக்தி அடைந்துள்ளது. உலக அரங்கில் பாரிய வெற்றிகளை ஈட்டியுள்ளது. என்றாலும் அது சில கஷ்டங்களையும் பிரச்னைகளையும் எதிர்கொள்ளவே செய்கிறது. இக்கஷ்டங்களை இரு கூறுகளாகப் பிரிக்கலாம்.

முதலாவதாக முதலாளித்துவ மேற்கு, குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா அணிசேரா இயக்கத்தின் ஏகாதிபத்

திய எதிர்ப்பு முனையை மழுங்கடிக்க எத்தனிக்கின்றன. உள்ளிருந்தே குழிபறிப்புச் செய்து அதை மேற்கத்திய செல்வாக்கு வட்டத்திற்குள் கொண்டுவர முயற்சிக்கின்றன. அணிசேரா இயக்கத்தை சோஷலிஸ சமாஜத்திற்கு எதிராகத் திருப்பவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

என்றாலும் இந்த நிர்ப்பந்தங்களுக்கெல்லாம் முகம் கொடுத்து இயக்கம் உறுதியாக நிற்கிறது. ஆனால் சில தனித்தனி நாடுகளின் நிலை வேறு. இங்கு தான் இரண்டாவது வகை கஷ்டங்களை காணமுடியும்.

முதலாவதாக பூர்ஷ்வா—ஜனநாயகக் குடியரசுகள், சோஷலிஸ நாடுகள், நிலப்பிரபுத்துவ மன்னராட்சி நாடுகள், ராணுவ சர்வாதிகார நாடுகள் முதலிய பலதரப்பட்ட நாடுகள் இந்த இயக்கத்தில் அங்கம் வகிக்கின்றன. இவை ஒவ்வொன்றும் சுயாதீனமாக வளரவும், சர்வதேச பிரச்னைகளை விவாதிப்பதில் முனைப்பான. சுயாதீனமான பாத்திரத்தை வகிக்கவும் முனைகின்றன, இவற்றுள் பல தமக்குள்ளேயே பிளவுபட்டும் மோதியும் நிற்கின்றன. ஆகவே உலக அரசியல் பற்றிய அணுகுமுறையிலும், அணிசேராமையை அர்த்தப்படுத்துவதிலும் இவற்றிற்கிடையில் மாறுபட்ட நிலைபாடுகள் உள்ளன. இந்த அடிப்படையில் எழும் முரண்பாடுகள் சில ஸ்தூலமான பிரச்னைகளில் இயக்கத்திற்குள் உள் போராட்டமாக மாறுவதை அவதானிக்க முடியும். இதனால் தான் இந்நாடுகளுக்கிடையில் இருவகை போக்குகள் நிலவுவதைக் காணலாம். ஒன்று ஏகாதிபத்திய எதிர்ப்பு போக்கு மற்றது ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்யும் போக்கு, சில நாடுகளின் அயல்நாட்டுக் கொள்கையில் ஏகாதிபத்திய எதிர்ப்பும் சோவியத் எதிர்ப்பும் ஏககாலத்தில் நிலவுகின்றன.

இத்தகைய அணுகுமுறையை பின்பற்றுபவர்கள் ஏகாதிபத்தியத் அணியிலிருந்தும் சோஷலிஸ சமாஜத்திலிருந்தும் ஒரே அளவு தூரத்திலிருப்பது என்ற கருத்துருவை முன்வைக்கிறார்கள். இதை ஏகாதிபத்தியம் முனைப்பாக ஆதரிக்கிறது. ஆனால் நாடுகளையும் மக்களையும் காலா காலமாக நசுக்கி, ஒடுக்கி, சுரண்டி, அடிமைப்படுத்தியவர்களையும் தேசிய விடுதலைப் போராட்டத் துவஜத்தை ஏந்தி நாடுகளின் சுதந்திரப் போராட்டங்களுக்கு ஆதரவும் உதவியும் அளித்தவர்களையும் பொறுத்து ஒரே அளவு தூரத்திலிருப்பது என்பது அர்த்தமற்றதாகும். இந்த அணுகுமுறையை வாழ்க்கை நிராகரிக்கிறது. ஒரேயளவு தூரத்தில் நிற்பது என்பது வளர்முக நாடுகளின் அடிப்படை நலன்களுக்கே முரணானதாகும். சோஷலிஸ



நாடுகள் உட்பட ஏனைய ஏகாதிபத்திய விரோத சக்திகளுடன் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கு இது எதிரிடையாக இருக்கும்.

அணிசேரா நாடுகள் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டத்தில் சோஷலிஸநாடுகளுடன் இணைந்துள்ளன: அணிசேரா நாடுகளுடன் சமாதானத்திற்கும் தேசிய விமோசனத்திற்குமான போராட்டத்தில் ஒத்துழைப்பது வாழ்வின் தேவையாகும்.

## எதிர்காலம்

முரண்பாடுகளைக் கொண்ட அணிசேரா இயக்கத்தின் ஐக்கியத்தை பேணுவது சாத்தியமற்றது என்று ஏகாதிபத்தியம் பிரச்சாரம் செய்கிறது. ஆனால் இத்தகைய விஷமப் பிரச்சாரத்தை அது இந்த இயக்கம் ஆரம்பித்த காலம் தொட்டே செய்துதான் வருகிறது. மாறாக இந்த இயக்கம் வளர்ந்தும் வலுப்பட்டும் உள்ளது. ஒரே வித சமூகத்தளம் இல்லாத போதிலும் அணிசேரா இயக்க நாடுகள் பொது மொழியையும் பொது இலக்கையும் கொண்டுள்ளன.

கஷ்டங்கள், பிரச்னைகள், குழிபறிப்பு எத்தனிப்புகளுக்கு மத்தியிலும் இந்த இயக்கம் தனது ஐக்கியத்தைப் பாதுகாப்பதுடன் சர்வதேச அரங்கில் தொடர்ந்து பெரும் பாத்திரத்தை வகிக்கும். ஏனெனில் இது காலத்தின் தேவையாகும்.

# ஏகாதிபத்தியத்தின் சுயரூபம்

வி. ஓவ்சின்னிகோவ்

# "மூலவள போராட்டம்" அதன் பின்னணியில்

சோவியத் விரோத தந்திரோபாயம் மற்றும் வளர்முக நாடுகளை தமக்குட்படுத்தி முதலாளித்துவ உலகில் அமெரிக்க மேலாதிக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்தின் நேரடி விளைவாகவே அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் முடிவமைதியிலிருந்து திரும்பி பிணக்குகளை ஏற்படுத்த முனைந்துள்ளன. எனவே குறிப்பாக மூல வளங்களைக் கைப்பற்றி எதிர்த்தரப்பினர்க்கு நெருக்கடியை ஏற்படுத்த முனைகின்றன.

## வெவ்வேறான அணுகுமுறைகள்

1950—1960களில் அமெரிக்க ஏகபோகங்கள் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீனமெரிக்காவிலுள்ள கனிஜ வளங்களிற் தமது கரங்களைப் பரப்பின.

ஏகாதிபத்தியத்துக்குள்ளுள்ள பற்பல ஸ்தாபனங்களுக்கிடையிலான அதிகாரச் சமநிலையிலேற்பட்ட மாற்றங்களால் "மூலவளங்களுக்கான போராட்டம்" ஒரு புதிய பரிமாணத்தையடைந்தன. ஐரோப்பிய பொருளாதார சமாஜ நாடுகள், ஜப்பான் இரண்டையும்விட அதிகமான பொருட்களை அமெரிக்கா 1970ல் உற்பத்தி செய்தது. 1980ல் பொதுச் சந்தை நாடுகள் மட்டுமே அமெரிக்காவைவிட முன்னணியில் நின்றன. அதே தசாப்தத்தில் ஐரோப்பிய பொருளாதார சமாஜமும், ஜப்பானும் மூலப் பொருள் இறக்குமதியிலும், அதனால் வெளிநாட்டுச் சந்தையிலும் தங்கியிருந்தன. பொதுச் சந்தை நாடுகளின் பண்டப் புரள்வு அமெரிக்காவைவிட மும்மடங்கு அதிகமாயிற்று. அவற்றின் மொத்த தேசிய லாபம் அமெரிக்காவைவிட சிறிது அதிகமாயிருந்தது.

## 'எண்ணெய் உபாயம்'

அமெரிக்க ஆளும் வட்டாரங்களைப் பொறுத்தமட்டில் "மூலவளங்களுக்கான போராட்டத்"தை அவர்கள்



தமது ஏகாதிபத்திய நோக்கங்களை எய்துவதற்கான உந்துவிசையாகக் கருதுகிறார்கள். அவர்களின் எண்ணெய் தந்திரோபாயம் இதைத்தான் காட்டுகின்றது. ஒரு காலத்தில் பிரதான எண்ணெய் ஏற்றுமதி நாடாயிருந்த அமெரிக்கா தனது சொந்த மூலவளங்களைப் பேணி வைத்துக்கொண்டு இறக்குமதிகளை அதிகரிக்கும் நிலையை எடுத்தது.

1980ல் அமெரிக்கா 27 கோடி தொன் எண்ணெய்யை அல்லது முக்கிய எண்ணெய் இறக்குமதி நாடான ஜப்பானின் தொகையளவுக்கு இறக்குமதி செய்தது. அமெரிக்காவின் மொத்த எண்ணெய் நுகர்வில் மத்திய கிழக்கின் எண்ணெய் 15 சதவீதம்—அல்லது 8 கோடி தொன்களேயாகும். இது பொதுச் சந்தை நாடுகளுக்கு 67 சதவீதம் ஜப்பானுக்கு அதைவிட அதிகமாகும்.

மத்திய கிழக்கிலிருந்துவரும் எண்ணெய் அமெரிக்க சக்தி சமன் பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. அப்படியிருக்க அமெரிக்கா பாரசீகக் குடாவை ஏன் "அமெரிக்க ஆதார நலன்களுக்கான பிராந்தியம்" எனப்பிரகடனப்படுத்திற்று? அங்கு ஏன் யுத்தக் கப்பல்களை அனுப்பிற்று? துரித பரம்பற் படைகளுக்கான தொடரான தளங்களை ஏன் நிறுவிற்று?

தனது கூட்டணிகளின் நலன்களுக்காகவே அமெரிக்கா செயலாற்றுகிறது என நினைப்பது தவறாகாது. முதலாளித்துவ உலகில் உற்பத்தியாக்கப்படும் எண்ணெயில் 50 சதவீதத்தை மத்திய கிழக்கே அகழ்கிறது. அது உலக ஏற்றுமதியில் 65சதவீதமாகும். அதனால்தான் சோவியத் விஸ்தரிப்பு என்று கதை, கட்டிக்கொண்டே அமெரிக்க விஸ்தரிப்பைச் செய்யும் நோக்கத்துடன் அமெரிக்க இராணுவத்தைப் பரப்பும் வாஷிங்டன் அதிகாரிகளுக்கு பாரசீகக் குடா முக்கியமாகப்படுகிறது. மேற்கைரோப்பாவினதும் ஜப்பானினதும் பொருளாதாரங்களை நிரப்பும் பிரதான பகுதியை தமது அதிகாரத்தைச் செலுத்த இலகுவாயிருக்குமென அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கருதுகின்றார்கள்.

## தென் ஆபிரிக்காவில்

தென் ஆபிரிக்கக் குடியரசின் மங்கனீஸ், குரோம், பிளாடினம் போன்ற கனிஜங்களும், ஸய்ரே நாட்டின் கொபால்ட்டும் அமெரிக்க இராணுவ மற்றும் தொழிற் கூட்டுகளுக்கு மிக அத்தியாவசியமாயிருக்கின்றன.

"கிறிஸ்டியன் சயன்ஸ் மொனிடர்" பத்திரிகை கூறுவதைப்போல போர் முக்கியத்துவம் வாய்ந்த வளங்கள் சம்பந்தமான கொள்கையை உருவாக்க ஒரு விசேட

குழுவை அமெரிக்க அரசாங்கம் ஏற்படுத்திற்று. அதன் சிபாரிசின் பேரிலேயே ரீகன் நிர்வாகம் தென்னாப்பிரிக்க இனவாத அரசுடன் மீண்டும் நல்லிணக்கம் என்ற நிலைபாட்டை எடுத்தது.

நியூயோர்க் சஞ்சிகையால "ஆப்ரிகா ரிபோர்ட்" இவ்விதம் எழுதுகிறது: "மூவளங்களுக்கான போராட்டம்" என்ற கருத்து வாஷிங்டனுக்கு முக்கியத்துவச் சிறப்பான பல இராணுவ மற்றும் அரசியல் நடவடிக்கைகளை எதிர்கொண்டதேயாகும். எனவே சவூதி அரேபியா, தென் ஆபிரிக்கக் குடியரசு போன்ற போர் முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களை விநியோகிக்கும் நாடுகளுடன் அமெரிக்கா "விசேட உறவுகளை" ஏற்படுத்திக் கொள்ளும், இந்து சமுத்திரத்தில் அமெரிக்க இராணுவ படைகளை நிரப்பும், எண்ணெய்வயல்களையும், சுரங்கங்களையும் "காவல் புரிய" துரித பரம்பற்படைகளைப் பயிற்றுவிக்கும் அல்லது மேலும் குறிப்பாகக் கூறுவதானால் வயல்களையும், சுரங்கங்களையும் கைப்பற்றி ஈற்றில் மூலப்பொருட்கள் சம்பந்தமாக ஒரு ஜனாதிபதி ஆலோசனைக் கவுன்சிலையே ஏற்படுத்தும்.

இக்கருத்து, கனிஜவளங்களின் செழிப்பான வளர்முக நாடுகளின் பிற்போக்கு ஆட்சிகளுக்கான ஆதரவையும், கனடா, மெக்ஸிகோ நாடுகளிலுள்ள அகழ்வுத் தொழில்களில் அமெரிக்க மூலதனத்தின் அதிகரிக்கும் ஊடுருவலுக்கானதுமான ஆதரவையும்கூட எதிர்கொண்டேயிருக்கிறது.

## சித்தாந்த அரங்கு

# சமாதானமும், சமாதான சகவாழ்வும்

"மார்க்ஸிஸ—லெனினிஸ சித்தாந்தத்தின் அடிப்படைகள்" என்ற தலைப்பினுள் இக்கட்டுரையை உள்ளடக்கலாம். ஐக்கிய அமெரிக்க ராணுவ வட்டாரங்களில், குறிப்பாக ரீகன் நிர்வாகத்தினால் சர்வதேசச் சூழ்நிலைகள் நெருக்கடி நிலைக்குள்ளாக்கப்படுவதுடன் தொடர்புடைய ஒரு பிரச்னை குறித்து இது ஆராய்கிறது வேறுபட்ட சமூக, அரசியல் முறைகளைக்கொண்ட அரசுகளிடையே சமாதானமும், சமாதானசகவாழ்வுக்கோட்பாடும்பற்றியபிரச்னையேஇதுவாகும்.

நாடுகளுக்கிடையில் எழும் முரண்பாடுகளுக்குத் தீர்வு காணும் ஏதுவாக யுத்தங்களை உபயோகிப்பதற்கு முடிவு காணும் பிரச்னை விஞ்ஞான சோஷலிஸத்தின் பிதாமகர்களாகிய கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் ஏங்கல்ஸ் ஆகியோருடைய நெருக்கமான கவனத்தை ஈர்க்கும் வஸ்துவாக இருந்து வந்துள்ளது. இவர்களுடைய சிந்தனைகள் வி. ஐ. லெனினால் மேலும் வளர்க்கப்பட்டுள்ளன, 1917 நவம்பர் புரட்சியில் ஜனித்த உண்மையான சோஷலிஸத்தின் நியதிகளில், வேறுபட்ட சமூக—அரசியல் முறைகளைக் கொண்ட ராஜ்யங்களுக்குக்கிடையில் சமாதான சகவாழ்வு ஏற்படுவதற்கான கொள்கையொன்றினை அவர் உருவாக்கினார். லெனினுடைய இந்தச் சித்தாந்தம் அளவிட்டுக்கூறமுடியாத முக்கியத்துவத்தைக் கொண்டதாக வளர்ச்சியடைந்துள்ளது. எமது புவியிலுள்ள சகல ஜீவராசிகளையும் அழித்தொழிப்பதற்குப் போதுமான நியூக்கிளியர் ஆயுதங்கள் இன்று உலகில் குவித்துவைக்கப்பட்டுள்ளன. இந்தச் சிக்கலான சூழ்நிலையில் நாடுகளுக்கிடையில் சமாதானம், சமாதான சகவாழ்வு, யுத்தங்களெதுவுமற்ற சமாதானம், கோடானுகோடி மக்களின் அழிவுகளில்லாத சமாதானம், பல நூற்றாண்டுகால வரலாற்றில் மனிதகுலத்தால் உருவாக்கப்பட்ட பொருள்முதல், கலாச்சாரப் பெறுமானங்களின் அழிவுகளில்லாத சமாதானம்பற்றிய மார்க்ஸிய—லெனினிய மனிதாபிமான எண்ணக்கரு குறிப்பிடத்தக்கதோர் முக்கிய ஸ்தானத்தை வகிக்கிறது.

சோஷலிஸ முறை உதயமாவதற்கு முன்னர் சர்வதேச உறவுகள் அசமத்துவம், பல நாடுகள் ஏனைய சில நாடுகளின் அதிகாரத்திற்குட்பட்டிருத்தல், சர்வாதி

காரம், வன்முறை ஆகிய, முதலாளித்துவமுறையினுல் முன் வைக்கப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன.

முதலாளித்துவத்தின் கீழ் ராஜ்யங்களுக்கிடையிலான முரண்பாடுகளின் மிகக்கொடிய வெளிப்பாடுகளாக யுத்தங்களும். ஆக்கிரமிப்புகளும் இருந்துவந்துள்ளன. முதலாளித்துவ சகாப்தத்தில்பெரிய அளவினை அடைந்திருந்தயுத்தங்கள் உலக மக்களுக்கு அளவிட முடியாத்துயரங்களை ஏற்படுத்தின, முதலாவது உலக மகாயுத்தம் பத்து மில்லியன் மக்களைப் பலிகொண்டது (1914—1918), இரண்டாவது உலக மகா யுத்தமோ (1939—1945) ஐம்பது மில்லியன் மக்களைப் பலியெடுத்தது.

கார்ல் மார்க்ஸ் தீர்க்கதர்சனமாகக் கூறியது போன்று சோஷலிஸத்தின். பதாகை ''சமாதானம்'' என்ற தாரக மந்திரத்தைத் தாங்கியுள்ளது. சோவியத் அரசாங்கத்தினுல் சகல மக்களுக்கும் விடுக்கப்பட்ட முதலாவது ஆக்ஞை சமாதானத்தின் மீதான ஆக்ஞையே யாகும். சோஷலிஸம் அடிப்படையில் புதியதொரு கொள்கையினை, சர்வதேசியத்தின்மீது தளம் கொண்ட ஒரு கொள்கையினை, சகல மக்களுக்குமிடையில் சமாதானம், நட்புறவு என்பவற்றிற்கான ஒரு கொள்கையினை முன்வைத்துள்ளமை முற்றிலும் இயல்பானதேயாகும். சோஷலிஸ சமாஜத்தின் அமைப்பிற்கிடையில் புதியதோர் வகையிலான சர்வதேச உறவுகள் உருவமாகியுள்ளன. கலோனியல் அடக்குமுறையிருந்து தம்மைத்தாமே விடுவித்துக் கொண்ட நாடுகளுக்கு உதவியும் ஆதரவும் வழங்கும் பிரதான ஸ்தானமாக சோஷலிஸ சமாஜம் இருந்துவருகிறது.

வேறுபட்ட சமூக முறைமைகளைக் கொண்ட ராஜ்யங்கள் ஒன்றனருகில் இன்னொன்ருக இருப்பது இன்றைய சகாப்தத்தின் விசேஷ குணும்சமாக உள்ளது. சர்வதேச விவகாரங்களில் ஏகாதிபத்தியம் தனது மேநிலையை இழந்துவிட்டதனை உலகப்படைகளின் சமநிலை நன்கு எடுத்துக் காட்டுகிறது. இதே நேரத்தில் சோஷலிஸ சமாஜ அமைப்பின் கீழ் வடிவம்பெற்ற புதிய வகையிலான சர்வதேச உறவுகள் உலகளாவிய ரீதியில் பரவமுடியவில்லை. ஏனெனில் முதலாளித்துவமுறை இன்றும் பல நாடுகளில் காணப்பட்டு வருவதேயாகும்.

இந்தச் சூழ்நிலையில் வேறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுக்கிடையில் எவ்வடிவத்திலான உறவுகள் இடம்பெறக்கூடும்?

சோஷலிஸ நாடுகளுக்கும், முதலாளித்துவ நாடுகளுக்குமிடையில் உள்ள உறவுகளின் ஒரேயொரு யதார்த்த பூர்வமான கோட்பாடு லெனினுல் உருவாக்கப்பட்ட சமாதான சகவாழ்வுக் கோட்பாடு மட்டுமேயாகும்;



சர்வதேசப் பிரனைகளுக்குத் தீர்வுகாணும் கருவியாக யுத்தத்தினை உபயோகிக்காதிருத்தல், இறைமை, சமத்துவம், ஏனைய ராஜ்யங்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்யாதிருத்தல் ஆகிய கோட்பாடுகளைக்கடைப் பிடித்தல், நாடுகளின் சமூக—பொருளாதார—அரசியல் முறைகளைக் கருத்திற்கொள்ளாது பரஸ்பரலாபந்தரும் பொருளாதார. கலாச்சார பிணைப்புகளைப் பலப்படுத்துதல் என்பன சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டின் பிரதான அம்சங்களாக உள்ளன. நாடுகளுக்கிடையிலான சகல பிணக்குகளையும் சமாதான பூர்வமான பேச்சுவார்த்தைகள் மூலமாகத் தீர்த்து வைக்கலாமென்பதை அனுபவங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

சமாதான சகவாழ்வு உலக அபிவிருத்திக்கும், சர்வதேச உறவுகளின் சகல முறைகளினது ஸ்திரத்தன்மைக்கும் அவசியமானதாக உள்ளது. சமாதான சகவாழ்விற்கு வேறெந்த மாற்றீடுமேகிடையாது.

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவுற்று ஏறக்குறைய கால் நூற்ருண்டு காலமாக ஏகாதிபதிய பிற்போக்குவாதிகளும், ஆக்கிரமிப்பு வட்டாரங்களும் வேறுபட்ட சமூக முறைகளைக்கொண்ட நாடுகளுக்கிடையேயுள்ள உறவுகள் மிக மோசமாக இருக்குமென்றும், இதனுல் அடிக்கடி கெடுபிடி யுத்தங்கள் ஏற்படுமென்றும் கூறிவந்துள்ளன. தற்போதைய சூழ்நிலையில் யுத்தமொன்றின் விளிம்பில் சமன்செய்து கொண்டிருப்பது நியூக்கிலியர் முரண்பாடொன்றை எந்நேரத்திலும் தோற்றுவிக்கக் கூடுமென்பது உண்மைதான். ஒன்றில் சமாதான சகவாழ்வை நோக்கிச் செல்ல வேண்டும் அல்லது பேரழிவொன்றைநோக்கிச் செல்லவேண்டும். இவற்றைவிட மூன்ருவது மார்க்கம் ஒன்று இருக்கவேமுடியாது.

சமாதான சகவாழ்வுக் கோட்பாடு இன்று பரவலான அங்கீகாரத்தைப்பெறுள்ளபோதிலும் இதனைச்சுற்றி கூர்மையான சித்தாந்தப் போராட்டமொன்று கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது: சமூக அபிவிருத்தியின் ஸ்தூலமான விதிகளின் இயக்கத்தினை எவராலும் தடுத்துநிறுத்திவிட முடியாது. எங்கெல்லாம் அசமத்துவம், சமூக, தேசிய அடக்கு முறைகள் நிலவுகின்றனவோ அங்கெல்லாம் இந்தக் கொடுமைகளுக்கெதிரான போராட்டங்கள் உருவாவது தவிர்க்க முடியாத செயற்பாடாகவுள்ளது.

சமாதான சகவாழ்வுக் கோட்பாடு ராஜ்யங்களுக்கிடையிலான உறவுகளுக்கு மட்டுமே பொருத்தமானதாகும். சோ. சோ. கு ஒ. வினதும் மற்றும் ஏனைய சோஷலிஸ நாடுகளினதும் வெளிநாட்டுக்கொள்கைக்கும் சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளுக்குமிடையில் எவ்விதமுரண்பாடுகளுமில்லை. சோஷலிஸ சமாஜ நாடுகள் முதலாளித்துவ நாடுகளுடன் கொண்டுள்ள உறவுகளில் மட்டுமே இக்கோட்பாட்டினைக் கடைப்பிடித்துவருகின்றன. சமாதான் சகவாழ்வுக் கோட்பாடு சோஷலிஸத்திற்கும், முதலாளித்துவதிற்குமிடையிலான சித்தாந்தப் போராட்டத்தினை எவ்வகையிலும் முடிவிற்குக் கொண்டுவரமாட்டாது;

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

சோஷலிஸம்
தத்துவமும் நடைமுறையும்

பல்துறைப் பயிற்சி நிலையம்

இம்மாத சஞ்சிகையைப்
பெற பின்வரும் முகவரிக்கு
எழுதுங்கள்!

சோஷலிஸம் தத்துவமும் நடைமுறையும்
சோவியத் தூதரக தகவல் பிரிவு,
27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த,
கொழும்பு-7.

பிரகதி-அச்சகம் 93, மாளிகாகந்த ரோட், கொழும்பு-10